Nallur

விலை ரூபா 1-25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 ஆடி 29 ஜூலைகம் 7 இதழ் 185

யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 14-8-1986

கடலில் மீட்கப்பட்ட தமிழர்:-

## ஒரு வருட காலம் கனடாவில் தங்க அனுமதிக்கப்படுவர்

### இந்தியாவிலிருந்தே புறப்பட்டனர்

ஒட்டாவா, ஆகஸ்ட் 13

கனடாவுக்கருகில் கடலிலிருந்து மீட்கப்பட்ட 152 இலங்கைத் தமிழரின் புகலிட விண்ணப்பங்கள் பரிசீலிக்கும் வரை இவர்கள் ஓராண்டு காலம் கனடாவில் தங்கியிருக்க அனுமதிக்கப்படுவார்கள் என்று கனடா குடிவரவுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்த 152தமிழ் அகதிகள் கடந்த ஜூலை மாதம் 7 ம் திகதியன்று இந்தியாவின் துறைமுக மொன்றிலிருந்து இரவு நேரத்தில் தமது பயணத்தை மேற் கொண்டிருந்தார்கள் என்று விசாரணைகளில் இருந்து தெரியவருகிறது.

அமெரிக்காவிற்குத் தம்மை அழைத்துச் செல்வதாகக் கூறியவர்கள் தங்களிடமிருந்து 3000டாலர் முதல் 5000டாலர் வரைஒவ்வொருவரிடமும்பெற்றுக் கொண்டதாகவும் இவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த 152 தமிழ் அகதிகளையும் ஏற்றி வந்து கடலில் அனாதரவாக விட்டுச் சென்ற கப்பலைத் தேடிக் கண்டு

[4-ம் பக்கம் பார்க்க]

● இனப் பிரச்னைக்குத் தீர்வு:

# "அரசு - கூட்டணி இணக்கம் காணும் நிலையில் உள்ளன"

## ராஜாங்க அமைச்சர் தகவல்

கொழும்பு, புதன்

'அதிகாரத்தை பரவலாக்குதல் தொடர்பாக அண்மையில் தெரிவிக்கப்பட்ட ஆலோசனைகள் மீது அரசாங்கமும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் இணக்கம் காணக் கூடிய நிலையில் இருக்கின்றன.

ராஜாங்க அமைச்சர் கலாநிதி ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் நேற்று அமைச்சரவை கூட்டத்தின் பின்நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

அமைச்சர் அல்விஸ் மேலும் தெரிவித்ததாவது:

"த. வி கூட்டணிக்குழு இந்த வாரம் கொழும்பு வந்து சேர்ந்ததும் அடுத்த சுற்று பேச்சுவார்த்தைகள் நடைபெறும் இருதரப்பினரிடையேயும் இணக்கயொன்று காணப்பட முன்னர் நடைபெறும் இறுதிச் சுற்றுப் பேச்சவார்த்தையாக இவை இருக்கலாம்.

இணக்கம் காணப்பட்டதும் சட்டமூலம் ஒன்றை ஜனாதிபதி தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார். இது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படவேண்டும்.

அரசாங்கத்திற்கும் த. வி கூட்டணிக்குமிடையில் இணக்கம் காணப்பட்டவுடன், தமிழ் பிரிவினைவாதிகள் ஆயுதங்களை கைவிட்டு தீர்த்து வைக்கப்படாதிருக்கும் விடயங்கள் குறித்து பேச்சுவார்த்தை நடாத்த முன்வந்தால் அவர்களுக்கு மன்னிப்பளிப்பது பற்றி பரிசீலனை செய்ய ஜனாதிபதி ஜெயவர்த்தன விரும்புகிறார்.

தற்பொழுது தமிழ்ப்பிரிவினை வாதிகள் சட்டரீதியாக குற்றவாளிகளாகவே கருதப்பட்டு வருகிறார்கள்" எனவும் அமைச்சர் குறிப்பிட்டார். (சி)

அக்கரைப்பற்றில்—

## கமாண்டோக்கள் மீது தாக்கு பலர் காயம்! புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், வியாழன்

அக்கரைப்பற்றில் ரோந்து சென்ற கமாண்டோக்கள் மீது விடுதலைப்புலிகள் 'கிறனேட்'டுகள் வீசித்தாக்கியதால் கமாண்டோக்கள் பலர் படுகாயமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது

இது தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது.

அக்கரைப்பற்று பொலிஸ் ராணுவ கூட்டு முகாமில் இருந்து நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் 100க்கும் மேற்பட்ட கமாண்டோக்கள் நடைபவனியாக புறப்பட்டு முகாமுக்கு அண்மித்த பகுதியொன்றில் ரோந்து வந்து

[4ம் பக்கம் பார்க்க]

யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் 4 சடலங்கள்

## பிரேதபரிசோதனை செய்ய சட்டவைத்திய அதிகாரிகளில்லை

யாழ்ப்பாணம், வியா

யாழ் பெரியாஸ்பத்திரி சவக்காலையில் ஒரு பெண், ஒரு வயோதிபர், இரு இளைஞர் ஆகியோரின் சடலங்கள் வைக்கப்பட்டுள்ளன.

பிரேத பரிசோதனை செய்வதற்கு யாழ் ஆஸ்பத்திரியில் சட்டவைத்திய அதிகாரி இல்லாததினால் இச் சடலங்கள் ஆஸ்பத்திரி சவச்சாலையில் தொடர்ந்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

ஆஸ்பத்திரியில் மரணமான சரஸ்வதி, சின்னக்கடையில் மரணமான வயோதிபர் முத்துசாமி, செல்வா ஸ்தூபிக்கு அருகாமையில் பலியான உதயகுமார், யாழ் முனீஸ்வரன் வீதியில் பலியான மோகராசா ஆகியோரின் சடலங்களே சவச்சாலையில் வைக்கப்பட்டுளளன,

இவையாவும் துப்பாக்கிச் சூட்டால் நிகழ்ந்த மரணங்களாகும். [ச]

## கூட்டணி குழு இன்று வருகிறது

(கொழும்பு)

இனப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான ஆலோசனைகள் குறித்து அரசாங்கத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தைகள் நடாத்துவதற்காக த வி கூட்டணித் தலைவர்கள் இன்று இலங்கை வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் தலைமையிலான தூதுக்குழுவில் கத்தோலிக்க மதகுரு ஒருவரும் இடம்பெறுவர். பேச்சுவார்த்தைகள் 16 ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகும். [சி]

## போராளிகள் புதுடில்லி அழைப்பு

சென்னை, ஆக.13

இலங்கையில் சமாதான பேச்சுவார்த்தைகள் நடக்கும் சமயத்தில் சென்னையிலுள்ள தமிழீழவிடுதலை இயக்கங்களின் தலைவர்களை புதுடில்லிக்கு வரும்படி இந்திய அரசு கேட்டுளளதாகத் தெரியவந்துள்ளது.

அநேகமாக இவர்கள் வெள்ளிக்கிழமை புதுடில்லி செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுறது. [கி]

யாழ். முனீஸ்வரன் வீதியில்—

## சுகாதார தொழிலாளி துப்பாக்கிச் சூட்டுக்குப் பலி

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ் முனீஸ்வரன் வீதியில் நடந்துசென்ற சுகாதார தொழிலாளி ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

நேற்றுப் பிற்பகல் 5 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றது

கோட்டைப் பகுதியை நோக்கிச் செல்லுகின்ற முனீஸ்வரன் வீதியில் நடந்துசென்ற போதே இவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார். மந்திகை ஆஸ்பத்திரியில் கடமை

(4-ம் பக்கம் பார்க்க)

கோட்டை எதிரில்-

## புளொட்டின் அரண் பலப்படுத்தப்பட்டுள்ளது!

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவமுகாமுக்கு எதிரில் காங்கேசன்துறை வீதியின் குறுக்கே புளொட் இயக்கத்தினரால் அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அரண் மேலும் பலப்படுத்தப்பட்டுள்ளது.

மணல் மூடைகளினால் அமைக்கப்பட்டுள்ள இந்த அரண் மேலும் உயரமாகவும் அகலமாகவும் நீளமாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

யாழ் சத்திரத்துச்சந்தியிலிருந்து தபாற்கந்தோர் நோக்கிச் செல்லும் வீதி வாகனப்

[4-ம் பக்கம் பார்க்க]

தம்பலகாமத்தில் படையினரால்——

## கணவன், மனைவி உட்பட நாலு கிராமவாசிகள் சுட்டுக் கொலை

மூதூர், புதன்

தம்பலகாமத்திலுள்ள புதுக்குடியிருப்புக் கிராமத்தில் ரோந்து சென்ற ராணுவத்தினரால் கணவன், மனைவி உட்பட நால்வர் சுட்டுக்கொல்லப்பட்டனர் 5 குடிசைகளும் தீக்கிரையாக்கப்பட்டன. நேற்று இச்சம்பவம் நடைபெற்றது.

திரு. கோணமலை (வயது55) அவரதுமனைவி திருமதி சீதைப்பிள்ளை (வயது50), திரு நடேசபிள்ளை (வயது 50), திரு. தர்மராஜா (வயது 30) ஆகியோரே படையினரின் துடபாகிப் பிரயோகத்தினால் பலியானவர்கள்.

ராகிங் பிரச்னை—

## யாழ்.பல்கலைக்கழகமாணவர் இன்று அடையாள உண்ணாவிரதம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இன்று அடையாள உண்ணாவிரதமிருக்க முடிவு செய்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இத் தகவல் வெளியிடப்பட்டது.

யாழ். பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்குழு இப்பத்திரிகையாளர் மாநாடடை நடத்தியது.

ராகிங் பிரச்னைசம்பந்தமாக

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

புடவைக்கடை, சாய்ப்புக் கடைகளுக்குரிய நல்ல நிலைமையிலுள்ள கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்குண்டு கணேசன் ஸ்ரோர்ஸ், 63, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் [C-4025]

யாழ். மாநகரசபை எல்லைக்குள் கே. கே எஸ். றேட்டுக்கு அருகாமையில் நல்ல சுற்றாடலில் சிறிய வீட்டுடன் 1½ பரப்புக்காணி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க. மாசிலாமணி 14, கேசாவில் பிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம். [C-4031]

SonyT V 2032, Sharp T V 20'' Video Deck National NV 7500, Video Deck National NV 390, Generator-900 watts. Car A-40 உரிமையாளர் வெளிநாடு செல்வதால் மலிவு விலையில்பெற அரியசந்தர்ப்பம்: உடன்தொடர்பு கொள்க. வே. அமிர்தலிங்கம், பொன்னுவலை களபூமி. காரைநகர். [C-4021]

அளவெட்டி வடக்கிலும் கும்பிழாவளைப் பிள்ளையார் கோவிலுக்கு மேற்கு வீதியிலும் உள்ள கட்டையன் சீமா என்னும் 10 நில பரப்புகாணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க:- திருமதி. தர்மலிங்கம் சேணிக்கரை அளவெட்டி. (C 3987)

### வகுப்புகள்

வெளிநாடு செல்பவர்களுக்கு குறுகிய காலத்தில் Technical சான்றிதழ் பெறுவதற்கு வாய்ப்பு:- Electronic Engineering, Radio and T. V (Antenna, Deck), Electrical wiring, வெல்டிங், மோட்டர் வையின்டிங், மோட்டார்மெக்கானிசம், Typing (English), புதிய பிரிவுகள் 16-08-86 இல் ஆரம்பமாகின்றன. Vispa Engineering Aid Hall, (ஆனைப்பந்திச் சந்திக்கருகாமையில்) 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (C-4046)

G C.E. A/L 87-ம், 88-ம் ஆண்டுகளுக்கான மனைப் பொருளியல் வகுப்புகளும். செயல்முறை வகுப்புகளும் ஆரம்பமாகின்றன. விபரங்கட்கு:G S Ladies Academy, Victoria Road, Jaffna. (C 4018)

Spoken English புதிய நாளாந்த / வார இறுதி வகுப்புகள். ஆரம்பம்: 18-8-86 நேரம் மாலை 4 - 5. சனி / ஞாயிறு16-8-86. நேரம் மாலை 3 - 5. ஆசிரியர்: S. B Iyar, 12, வைமன் வீதி, நல்லூர். [C-4011]

### தேவை

அரியாலை மகளிர் சங்கத்தில் பப்படச் செய்கையை ஆரம்பிப்பதற்கு இத்துறையில் அனுபவமும் ஆற்றலும் கொண்ட இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியானவர்கள் தமது விண்ணப்பத்துடன் அரியாலை மாம்பழம் சந்திக்கருகாமையில் இருக்கும் இலந்தைக்குளம் வீதியில் உள்ள மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் 16-8-86-ந் திகதி பி. ப. 2-00 மணிக்கும் 4-00 மணிக்குமிடையில் சமூகம் கொடுக்கவும். அத்தேதியே தேர்வு நடைபெறும். ஏனைய விபரங்களை நேரில் பெற்றுக் கொள்ளலாம். தலைவி, அரியாலை மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கம். C 4057

### தவறிவிட்டது

குமாரசாமி சாந்தேஸ்வரி, 67, பலாலி றேட், கந்தர் மடம் என்பவருடைய அடையாள அட்டை 558380829V 10-08-86 அன்று சரவணையில் இருந்து அராலித் துறைக்குப் பயணம் செய்யும்போது தவறி விட்டது. கண்டு எடுத்தவர் மேற்காட்டிய விலாசத்திற்கு தயவுசெய்து அனுப்பி வைக்கவும். [C-4044]

### வாடகைக்கு

அறையும் குசினியும் உட்பட (Annex) வீடு வாடகைக்கு உண்டு. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்: தில்லைநாதன் ரவீந்திரநாதன். சட்டைப் பிராய், யாழ்ப்பாணம். [C-4012]

### மணப்பந்தல்

50 வயதுடைய வருக்கு 42 - 48 வயதிற்கும் இடைப்பட்ட தணைவி தேவை. பிள்ளைகள் இல்லாத, விவாகரத்துப் பெற்ற, காரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம் தொடர்பு கொள்ளவேண்டிய வி: இல. 4052, பே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [C-4052]

கலர் பிலிம் சுருள்களை PROCESSING + PRINTING செய்வதற்கு கொழும்பு ஸ்ருடியோ

(A 1041)

### 31-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி நாகரத்தினம் சிவராஜா**

மாதா மடியில்: 24-07-1922

மாதவன் அடியில்: 15-07-1986

எம்மை வாழ்வித்த எமக்கு ஒளிதந்த அன்புத் தெய்வமே மின்னுமல் முழங்காமல் எம்மை ஆறுத்துயரில் விட்டுப் பிரிந்த உத்தமியே உங்கள் ஆத்மசாந்தி வேண்டி கண்களில் நீர் பெருகி எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திப்போமாக. அவரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் எமது உளம்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


அன்புக் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தேவாலய வீதி,
சங்கானை. C 4014

### சேவை

உங்கள் உணவில் உருசி சேர்க்கவும், திடீர் விருந்தினரை சமாளிக்கவும், கத்தரி பிக்கிள், வாழைக்காய்பிக்கிள், இருல் பிக்கிள், இறைச்சி பிக்கிள், அச்சாறு இவைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளவ, வஸ்தியாம்பிள்ளை, சுண்டிக்குளி, தயாரிப்பு:புதுவாழ்வு நிலையம், ஆனைக்கோட்டை. [C-4041]

### ஓராண்டு நினைவஞ்சலி




**செல்வன் சின்னத்தம்பி தியாகராசா**
(வெங்கலச் செட்டிகுளம் கொள்வனவு முகாமையாளர்)

மலர்வு: 15-10-1956
உதிர்வு: 14-08-1985

உடலால் பிரிந்து உலகினில் மறைந்தாலும் எம் உயிரினில் கலந்து உணர்வாய் நிறைந்தாய்!
உன் ஆன்மா சாந்தி அடைய என்றும் பிரார்த்திப்போம்.

பெற்றோர், சகோதரர்கள்,
மைத்துனர், மருமக்கள்.
A 1125

### ஓராண்டு நினைவஞ்சலி



**திரு. சபாபதி தம்பிஐயா**
(கட்டட ஒப்பந்தகாரர்)

மலர்வு: 25-07 1902
உதிர்வு: 25-07-1985

அன்புடனும், பாசத்துடனும் வாழ்ந்து எம்மையெல்லாம் ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில் கொண்ட எம் அன்புத் தெய்வமே! எங்கள் குடும்ப ஒளி விளக்கே! உங்கள் மதிமுகமும், சொல்லும், செயலும் எங்களால் மறக்கமுடியுமா? நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எங்களை விட்டகலாது உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
பனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்:

''மனோ மஹால்'',
சரசாலை,
சாவகச்சேரி. [C-4055]

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## TUDOR COLOUR FILM

வடபகுதி ஏக விநியோகஸ்த்தர்

**SUPPREME ASSOCIATES**

185/6, இரண்டாவது மாடி,
நியூ லலிதா கட்டிடம்,
(வின்ஸர் தியேட்டர் முன்பாக)
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

எம்மிடம்

Sakura Printing Papers
மற்றும்
Sakura Printing Chemicals
பெற்றுக்கொள்ளலாம்.

Photochrome பிறின்டிங்
ஓடர்களும் எம்மால் ஏற்றுக்கொள்ளப்படும்.

(C 4054)

## அறிவித்தல்

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்
வடபிராந்திய எரிபொருள்
விற்பனை முகவர்கள் கூட்டம்

காலம்: 16-8-86 நேரம்: 10-30 காலை
இடம்: 207, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம்.
(Old Park Chinese Restaurant).

மேற்படி முகவர்கள் யாவரையும் தவறாது சமூகம் தரும்படி கேட்டுக்கொள்கிறோம்.

வடபிராந்திய எரிபொருள்
விற்பனை முகவர்கள் சங்கம்.

(C 4042)

## பிரயாண ஒழுங்குகள்

✱ டென்மார்க் ✱ கனடா

நேரடிப் பிரயாணம் உடனுக்குடன் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்.

✱ சவூதி ✱ குவைற்
✱ அபுதாபி

ஆகிய இடங்களில் வருமான வாய்ப்புகளுக்கான ஒழுங்குகள் உடன் செய்து கொடுக்கப்படும்.

Passport, Bond
முதலியனவும் செய்து கொடுக்கப்படும்.

## GROUP ATLANTIC

163, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
[அடைக்கலமாதா கோவிலுக்கு முன்பாக]

A 1035

## V. J. S. GROUP

வியாபாரிகளே!

உங்களுக்குத் தேவையான

✱ COCA COLA
✱ FANTA
✱ PORTELLO & SPRITE

முதலியவற்றை மொத்தமாகப் பெற்றுக்கொள்ள உடன் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**113, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: 24204

(C 4040)

**மணிவாக்கு**

ஆமை வருமாட்கண்டைந் தடக்கஞ்
செய்தாற் போல்
ஊமை யுருக் கொண்டொடுங்குவது மெக்காலம்.
— பத்திரகிரியார்

# நமது நோக்கு

## குத்துவிளக்கில் கணக்கு

"இந்த யுத்தம் முடிவடைவது நிச்சயம்; சமாதானம் பற்றி அரை குறையாகப் பேசிக்கொண்டிருக்கின்றோம். அது ஒரு சாமானியமானதா? எமது வீரப் படையினர் போரொழிந்த சமாதான வாழ்வில் எவ்வாறு நாட்டம்கொள்ளலாமென்பதிலேயே இன்று பேசப்படும் சமாதானம் வெற்றிகாணமுடியும்."

இவ்வாறு முதலாவது உலகமகாயுத்த முடிவில் தமது தீர்க்க தரிசனத்தை வெளிப்படுத்தியவர் உலகின் மிகப்பெரிய விஞ்ஞானி, கலைஞானி நூலாசிரியர் எச் ஜி வெல்ஸ்

இதற்கு செவிசாய்க்கத் தவறிய இங்கிலாந்தின் ஆசியல் 20 வருடங்களுக்குப்பின் மீண்டுமொரு உலக யுத்தத்தை எதிர்நோக்கியது.

எங்கள் நேற்றைய பிரசுரத்தில் காணப்படும் "இனப்பிரச்னைக்கு ஒரு பொருளாதாரத் தீர்வு" என்ற கட்டுரை அன்று வெல்ஸ் ஆங்கில மக்களுக்கு விடுத்த எச்சரிக்கையை நினைவூட்டுகிறது

இராணுவத் தீர்வு, அரசியல் தீர்வு என்பவை நன்கு பேசப்படுகின்றன. ஆனால் சமாதானத்துக்கு அடிப்படையான பொருளாதாரத் தீர்வு பற்றி எவரும் ஆழமாகப் பேசியதை நாம் அறியோம்!

கட்டுரை ஆசிரியர் திரு. அ. சோமசுந்தரம் பிள்ளை ஆற்றலும் அனுபவமும் உடைய பட்டயக் கணக்காளர் என்பதை அவருடைய தெளிவான சிந்தனைகள் விளக்குகின்றன நேரடி அனுபவத்தில் எழுந்த கட்டுரை இது; சிந்தனைக்குரியது.

போரில் லயித்த 'பொடியன்கள்' வெற்றி காணும் வரை அதனைத் தொடர விரும்புவது இயற்கை. ஆனால் அவர்களின் அபூர்வமான ஆற்றலுக்கும் தியாக உணர்வுக்கும் ஏற்ற ஆக்க வேலைகள் சமாதானத் திட்டத்தின் மூலவேர் என்பது கட்டுரையில் ஆணித்தரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது

தாயகம் மீட்பு, தமிழர் உரிமைகள், சுயநிர்ணயம் - ஒரு சொல்லில் தமிழர் சுதந்திரம் - என்பதெல்லாம் இந்த நாட்டில் தமிழ் இளைஞரின் எதிர்காலம் மறைந்ததின் எதிரொலியே

இனப்பிரச்னைக்குத் தீர்வு மந்திரத்தால் மாங்காய் விழுத்தும்அற்புதம்போன்றதன்று. பலதரப்பட்ட சிக்கல் நிறைந்த குறைகள் நிவர்த்தி செய்யப்படவேண்டும்; இருப்பினும் சமாதானம் என்ற குழந்தை பிறக்கவோ அல்லது பிறந்தபின் உடம்பைப்புரட்டவோ, கட்டுரை குறிப்பிடும் பொருளாதாரத் தீர்வு இன்றியமையாமையை விளக்குகின்றது

இன்றைய போர் சடுதியாக மூண்டதல்ல; சுதந்திர இலங்கை கண்ட குறைகளில் மட்டும் உருவானதல்ல. பிரிட்டிஷ் ஆட்சியில் இன ஒற்றுமை இருந்தது; தமிழர் சீராகச் சிறப்பாக வாழ்ந்தனர் என்றது தவறான கருத்துக்கள் என்பது இன்று பிட்டுக் காட்டப்பட்டுள்ளன. வடக்கும் கிழக்கும் இன்று குத்துவிளக்கில் கணக்குப் பார்க்கும் நிலையிலிருக்கின்றன.

ஆங்கிலக் கல்வி, அதனால் இந்த நாட்டிலும், வெளிநாடுகளிலும் சம்பளம் பெறும் உத்தியோகங்கள் தமிழ் மக்களைக் கவர்ந்த அளவு வேறெந்த மக்களையும் கவர்ந்திருக்கவில்லை; அன்று தொடக்கம், சுதந்திரம் வரைக்கும் தமிழர் தம் திறமையை இத்துறையில் காட்டி விட்டனர்.

சுதந்திர இலங்கையில் தகைமைக்கு கிடைக்க வேண்டிய வாய்ப்பு இல்லாமற் போனது கடந்தகால தமிழ் ஆதிக்கத்தின் விளைவு என்று குறிப்பிடலாம்

அது என்னவானாலும் தமிழர் வாழும் பிரதேசங்கள் வறட்சியில் வாடுவதற்கு ஒரு அடிப்படை காரணத்தை திரு. சோமசுந்தரம் தெளிவு படுத்தியிருப்பது இன்றாவது எங்கள் கண்கள் விழிப்படைய உதவவேண்டும்.

எந்தத் தொழிலிலும், அதற்கு மாதசம்பளம் என்ன என்பதை நாடும் மனோபாவம் எங்களுள் உடன் பிறந்த பண்புபோல் தெரிகிறது; அது நிச்சயம் அகலவேண்டும். இன்று அது முடியாது போனால் என்றும் முடியாதென்பதை நாம் ஒரு சமூக ரீதியில் உணர்ந்தேயாக வேண்டும்.

பெருமைகள் பேசி சிறுமைகள் செய்யும் இனம் என்ற வசைக்கு இடமளிக்காது, எங்கள் இளஞ்செல்வங்கள் - எவ்வகையில் சமாதானத்தின் பலனை சுவைக்கப்போகின்றனர் என்பது தமிழர்கள் மட்டுமல்ல நாட்டின் ஆட்சியே மிகப் பொறுப்புடன் ஆராய்ந்து தீர்வு எடுக்கவேண்டிய விடயம்

போரில் உண்டான சிந்தனைத் திறமை, தொழில் நுட்ப விவேகம், சமயோசித சிந்தனைகள் சமாதான வாழ்வில் ஆக்கத்துக்கு உதவவேண்டும்.

துரித அபிவிருத்தித் திட்டம் வடக்கிலும், கிழக்கிலும் எவ்வாறு தொழிற்படலாமென்ற கருத்துக்கள் கட்டுரையில் புள்ளி விபரங்களுடன் தெளிவு படுத்தப்பட்டிருக்கின்றன.

"போர் தொடர்வதால் நாம் கண்ட மிச்சம் உயிர்ச்சேதமே" என்கிறார் ஜனாதிபதி ஜே. ஆர். "எங்கள் வருடாந்த பட்ஜட்டில் காற்பங்கு-பத்தாயிரம் மில்லியன் ரூபாய், போரில் விரயமாகிறது" என்று கண்ணீர் விடுகிறார் நிதியமைச்சர். இதற்கு மேலாக 'தமிழர்களுக்கு நாம் நியாயம் வழங்கத் தவறிவிட்டோம்' என்கிறார் நீண்ட பேச்சு நிகழ்த்திய நீதி அமைச்சர்.

'பீ சி,' பீ. சி.' என்று ஓலமிடும் ஆட்சியாளர் மட்டுமல்ல, அவர்களுடன் சமாதானம் பேசும் தமிழ்த் தலைவர்கள் ஏன் தமிழ்ப் போராளிகள் கூட சமாதானத்தை உள்ளூர கட்டாயமாக ஆராயவேண்டுமென்பதே எமது பணிவான பிரார்த்தனை.

## குண்டுவீச்சின்பின் வல்வெட்டித்துறை (4)

# அஞ்சலி சுவரொட்டிகள் நிறைந்துள்ள வல்வைநகர்

தமிழினக் கலாச்சாரத்துக்கும், அரசியலுக்கும் வல்வெட்டித்துறை அதிக சேவை செய்திருக்கின்றது!

தமிழ்த்தலைவர்கள் சுட்ட மண்ணும், சுடாதமண்ணுமாய் இருந்தபோது அவர்களை ஒற்றுமைப்படுத்த முனைந்திருக்கிறது.

இன்று!

தனது மேற்கு எல்லையில் ஆயிரக்கணக்கான வீடுகளை இழந்து அகதியாக இருக்கின்றது. ஒன்றும் இழக்காது ஆர்ப்பரிப்பது ஒருவகை, பல்வேறு

காலத்தில் வெட்டி எரித்துவிட்டதாக அக்கடையில் சிலர் கதைத்துக் கொண்டார்கள்! வடக்கே திரும்பிப்பார்க்கின்றோம். போராளிகள் கந்தன், ரமணன் ஆகியோரின் படங்கள் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

மேற்கே ரஞ்சித் என்ற போராளிக்கு அஞ்சலிதெற்கே பல வருடங்கட்கு முன்பு பொலிஸாரால் கொலைசெய்யப்பட்ட சிவஞானசுந்தரம் என்ற வாலிபர் பெயரால் பஸ்தரிப்பிடம் ஒன்று!

கள் நடந்து திரியாமல் வீட்டினுள் இருக்கின்றனர். சனசந்தடியற்று இருக்கின்றது. சில வீடுகள் எரிகின்றன. ஏன் என்றால் இலங்கைப் பாதுகாப்புபடையினர் இலங்கை தமிழர்களை கொலைசெய்தனர். நெடியகாடு என்ற இடத்திற்கு அண்மையில் சுமார் 60 இற்கு மேற்பட்ட கொலைநடந்தது.

அதற்கு அடுத்தநாள் எமது ஊர் வல்வெட்டித்துறையில் மு.ப 4 மணி தொடக்கம் பி.ப 5 மணிவரை முப்படைத் தாக்குதல்கள் நடந்தன. கடல்பீரங்கியாலும் ஹெலிகொப்டர் தாக்குதலாலும் இராணுவ முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களாலும் 11-6-86 அன்று வல்வெட்டித்துறை சிவன் கோவிலினுள் ஷெல் விழுந்தது, அப்போது கோவிலில் பாதுகாப்பு என்று நினைத்து வந்த மக்களில் பலர் காயமுற்றனர்; ஒருவர் பலி என்று

- ✶ அதிகாலையில் துயில் எழுப்பிய போர்விமானங்கள்
- ★ மக்கள் வங்கி இடிந்தது; அயல் வீடுகள் தரை மட்டம்.
- ★ நகரத்தை நிறைக்கும் அஞ்சலிச் சுவரொட்டிகள்
- ✶ மனதை உலுப்பிய சிறுவனின் கடிதம்.

இழப்புக்களுடன் பொறுமையாக வாழ்வது இன்னொரு வகை,

கடைசியாகச் சொல்லப்பட்ட வழியை வல்வெட்டித்துறை கடைப்பிடிக்கின்றது

கம்பர் தான்பாடிய அயோத்தியில் வறுமையைச் சொல்லியது கிடையாது.

காரணம்—அங்கு எல்லாமே செழிப்புத்தான்!

வீரர்கட்கு அங்கு மதிப்பு இல்லை. அங்கு எல்லோரும் வீரர்கள்தான்,

கம்பர் தந்த அயோத்தியில் கல்விக்கு மதிப்பில்லை. ஏனெனில் அங்கு எல்லோரும் கல்விமான்கள்தான்!

இந்த நிலை வல்வெட்டித்துறைக்குப் பொருத்தமானதே!

கடல் வளத்தால் வறுமையைவிரட்டியவர்கள் அவர்கள்!

ஐயங்காரின்ஆசியுடன்தொடங்கிய சிதம்பராக் கல்லூரி எத்தனையோ கல்விமான்களை உலகிற்கு அளித்தது. கடேட்டிலும், சாரணியத்திலும் அந்தக் கல்லூரி அகில இலங்கையிலுமே முன்னணியில் நின்றதை எவருமே மறுக்க முடியாது!

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த நவரத்தினசாமி முதல், உலகசாதனை வீரன் ஆனந்தன் வரை வல்வெட்டித்துறைப் பிரஜைகளே.

வெலிக்கடையில் மரித்துப்போன குட்டிமணியும், ஜெகனும் இந்த ஊருக்கு உரியவர்கள்.

பிரபாகரனும், மற்றும் பல போராளிகளும் இந்த மண்ணின் மைந்தர்களே

அந்தமண்ணில் நாமும்காலடி வைக்கிறோம்.

—அப்பாடா! இந்த அரச மாதர்கடியிலிளைப்பாறுவோம் என அங்கு சென்றோம். அங்கும் போராளிகள் பன்னிரண்டு

### பெற்றோல் செற்றடி


வல்வெட்டித்துறை பெற்றோல் செற்றடியில் வந்து நிற்கின்றோம்.

வடக்கே பார்க்கின்றோம். இருபது வயது நிரம்பாத ஒரு வாலிபனின் நிழல் உருவம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருக்கின்றது.

"போர்களத்திலே அவன் வென்றது உண்டு; ஆனால் வந்தது இல்லை"—இதுதான் கீழ காணப்பட்ட வாசகம். அந்த வாலிபனுக்காக ஒரு நிமிடம் அஞ்சலி செய்து புறப்படுகின்றோம்.

வல்வை பஸ்நிலையம்; அங்கே மினிபஸ்கள் நின்று கொண்டிருக்கின்றன. அருகே கலைச்சோலை புத்தகநிலையம்! அங்கும் சென்றோம்.

விசாரித்துப் பார்த்ததில் அந்த நிலைய அதிபர் சிதம்பராக் கல்லூரியின் பழைய நூலகர் அப்பாத்துரை எனத் தெரியவந்தது. சிதம்பராக் கல்லூரியின் மேசைகளையும், கதிரைகளையும் இராணுவம் போர் நிறுத்தக்



இடிந்த நிலையில் இருக்கும் ஒரு வீடு மக்கள் வங்கிக்கு அருகில் இப்படிக் காணப்படுகின்றது.
இப்படி அழிவுகள் பல.

டேருக்கு அஞ்சலி செலுத்தப்பட்ட திரைச்சேலைகள்

எங்குமே நாளை நாம் இருப்போமா என்ற நிலை.

### ஒரு சிறுவனின் கடிதம்

எமது வருகையில் முக்கியமான அம்சம் எமக்குக் கையளிக்கப்பட்ட ஒரு சிறுவனின் கடிதம்! படியுங்கள்-

அச்சிறுவன் எழுதுகின்றான்!

"மறக்கவே முடியாது"

அன்றொருநாள் எமது ஊர் வல்வெட்டித்துறையிலே மக்

தெரியவந்தது. 3 மணித்தியாலம்இரண்டு பொம்பர்கள் தாக்கின! வல்வெட்டித்துறை பெரிய குடியேற்றத்திட்டம் எரிக்கப்பட்டது. அப்போது ஊர் சனசந்தடியற்றுக் கிடந்தது பொதுமக்கள்நவிண்டில், நெல்லியடி, பாலாவி பாடசாலை என்னும் இடத்தில் அகதிகள் என்று பெயர் பெற்று அங்கு நிறைந்திருந்தனர். அடுத்தநாள் மக்கள் சேதமடைந்த வீடுகளைப்பார்த்தனர். 13-6-86 அன்று வெளிக்

(4-ம் பக்கம் பார்க்க)

**திக்கவயல் சி தர்மகுலசிங்கம்**


# நல்லை ஐயன் முருகையன்!

குலவுமிரு வாலைக் குயத்தியரோ டென்றும்
உலவுவரும் ஏகாந்தன் ஊரில் - நிலவும் பேரிப்
பஞ்சம் பசிபிணியை பாரதனிற் றங்கவிடான்
தஞ்சமெனக் கந்தனடி சார்.

ஃ ஃ ஃ

சங்கிலிய மாமன்னன் தங்கி யிருந்தாண்ட
சங்கிலியன் தோப்பயலிற் சார்நல்லை - இங்கிதமார்
தெள்ளி முகற்கிளைய சேந்தன் குடிபுகுவான்
உள்ளி உருகுவோர் உள்.

ஃ ஃ ஃ

சேயிழை மாதிருவர் சேரநல் லைப்பதியிற்
கோயில் குடிகொண்ட கோன்முருகன் - சேயில்லா
மக்கள் மனமுவப்ப மாண்போ டருள்புரிவான்
இக்கணமே அன்னவனை ஏத்து.

— கவியரசு வெண்பாமணி முருகசூரியன்

[இன்று நல்லூர் முருகன் 5-ம் திருவிழா]

# குண்டுவீச்சின் பின்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழமை அன்றுகடலில் நான்கு நேவிகப்பல்களில் வந்து ஐந்து வள்ளத்தில் கருப்புச்சட்டைக் காரர்களையும், ஆயுதங்களை யும் இராணுவமுகாமிற்குள் இறக்கினர். இன்னும்கலவரம் நடக்குமோ என்று மக்கள் அஞ்சுகின்றனர். சிலர் ஓடமுடி யாமல் தவிக்கின்றனர், சிலர் எம்மை இளைஞர்கள் காப்பாற் றுவார்கள் எனச் சொல்லு கின்றனர். அவர்கள் முகாமை சுற்றி நிற்கின்றனர் ராணு வம் பிடிவாதமாய் வெளியில் வரப்போகின்றோம் என்று நினைக்கின்றனர். அவர் கள் வெளியில் வந்தால் மண் டைதீவு கடலில் நடந்தது போல் நடக்குமோ என்று அஞ்சுகின்றனர் ஒவ்வொரு நாளும் ஹெலிக்கொப்டர், பொம்பர்கள், நேவி எல்லாம் வல்வெட்டித்துறையைச் சுற்றி வட்டமிடுகின்றன.

அ நவஜீவன்
வல்வெட்டித்துறை

சிறுவனின் கடிதம் தரும் சோக ஒலி, ரஷ்யா அமெரிக் காவைத் தாக்குமா என்று கேட்டு எழுதிய அமெரிக்கச் சிறுமியின் நினைவுகள் எமக்குத் தந்தது.

அத்துடன் அங்கிருந்து நகர்ந்தோம். முதலில் வல் வெட்டித்துறைக்கும் போர் விமானங்கள் வந்தது பற்றி யாரிடமாவது 'போட்டோ' இருக்குமோ என அறியப் புறப்பட்டோம்!

வல்வைப் பிரசைகள் குழு வினைச் சேர்ந்த திரு. குமார சாமியிடம் சென்றோம்;

அங்கும் இல்லை

பின்பு வாணியோ வீடியோ ஹோமிற்கு விரைந்தோம். பொம்பரைப் படம் எடுப்பது கஷ்டம் எனச் சொல்லிச் சிரித்தார் உரிமையாளர்.

மேற்குத் திசையில்தான் குண்டுகள் அதிகமாக வீசப் பட்டன!

தெற்கே வல்வெட்டியையும் கிழக்கே பொலிகண்டியையும் வடக்கே கடலையும் மேற்கே இராணுவ முகாமையும் எல்லை யாகக் கொண்ட சின்னஞ்சிறு நகரமே வல்வெட்டித்துறை.

நித்திரையை விட்டு வல்வை மக்கள் எழும்பு முன்பே அந்த மார் செற்றிப்போர் விமானங் கள் குண்டுகளைப் பொழிந்தன அதைத் தொடர்ந்து இரா ணுவ முகாமில் இருந்து ''ஷெல்'' அடிகள், கடலில் இருந்து பீரங்கிக் குண்டுகள் நகரமெங்கும் விழுந்தன.

டும்... டும்... டும்... படீர் டம்... டம்... மும்முனைத் தாக்குதல் ஆரம்பமானது.

தொண்டமானாறில் இருந்து கிழக்கே பருத்தித்துறை வரை அதிர்வுகள் கேட்கின்றன.

வேண்டாத பெண்டாட்டி கால் பட்டால் என்ன கை பட்டால் என்ன! யார் தலை யில் எது விழுந்தாலும் பயங் கரவாதச்சட்டம் பொறுத்துக் கொள்கின்றது.

புளியமரம், தென்னைமரம் எல்லாம் குண்டுகள் பட்டு எரிந்தன. பச்சிளம்பாலகர் கள், பெண்கள் குழந்தைகள் எனப் பலர் சுருண்டு விழுந் தனர்.

அருகே இருந்த பெறுமதி யான வீடும் தரைமட்ட மாகிக் கிடக்கின்றது

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சக்தி வடிவேல் ஆசிரி யரின் வீடு பின்பக்கம் தகர்ந்து கிடக்கின்றது! பாவம் ஆசிரியர் அதுபோன்று சுந்தரராஜன் என்பவரின் வீடும் இடிந்து கிடக்கின்றது.

வல்வைச் சந்தியில் ஏற் கனவே எரிக்கப்பட்ட கந்த சாமி புத்தகக்கடை கைவிட் டுக் கிடக்கின்றது.

சற்றுக் கிழக்கே நடந்தால் மக்கள் வங்கிக் கட்டிடம் பொம்பர்க் குண்டு வீச்சால் இடிந்து கிடக்கின்றது!

## கடைசி நேர வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பலாலிவீதி, கோண்டாவில் சந்திக்கண்மையில் சகல வசதி களுடன் கூடிய வீடுவளவு 3½ பரப்பு உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு வீ. த. பாலசிங்கம், பலாலி வீதி, கோண்டாவில். (C-4060)

புதிய உழவுஇயந்திர இணைப் புப்பெட்டி விற்பனைக்கு 32, சீனிவாசகம்வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம். C-4063

புதிய குளிர்சாதனப் பெட்டி (Genaral Japan) ஒன்று விற் பனைக்குண்டு. 32, சீனிவாசகம் வீதி, கொட்டடி. யாழ்ப்பா ணம். [C-4062]

### காணவில்லை

வண்ணார்பண்ணை மேற்கு பொன்னப்பாலேனைச் சேர்ந்த 198/1 இலக்கத்தில் வசிக்கும் கனகலிங்கம் உதயகுமார் என்ற 13 வயது சிறுவன் நேற்றுமுன்தினம் [12-8-1986] செவ்வாய் 11 மணியளவில் வீட்டிலிருந்து காணமற் போய்விட்டார். சிவந்த நிற முடைய இவர் காணமற் போகும்போது மஞ்சள் நிற ''ரீ- சேட்''டும் கட்டைக் காற்சட்டையும் அணிந்திருந் தார். இவர் யாழ். மத்திய கல்லூரி 8ம் வகுப்பு மாணவனு கும். இவர்பற்றிய தகவலை ஈழநாடு பத்திரிகை அலுவல கத்திலோ, மேற்படி விலாசத் திலோ அறிவிக்குமாறு தயவு டன் வேண்டுகின்றேன். தந்தை ச. கனகலிங்கம், பாது காப்பு உத்தியோகத்தர். [C-1134]

### லிடோ

காலை 10-30, 2-30, 6-30

Dragon Lee-Aa Golden Dragon
Johnnie Chan- As Silver Snake
in
GOLDEN DRAGON SILVER SNAKE
(Karate, Action, Thrills and Color)
Showing first time in Jaffna

கடைசி வாரம்
### வெலிங்டன்
வெண்திரையில்
10-30, 2-30, 6-30
இனிய பாடல்கள் அதி பயங்கர சண்டைகள், தந்திர காட்சிகள், நகைச்சுவை நிறைந்த
சிவாஜி, ஜமுனா வீரப்பா, நம்பியார்
தங்கமலை ரகசியம்
[புத்தம் புதிய பிரதி]
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.

## முகாமுக்கு வருமாறு பணிப்பு

வவனியா, புதன்

பின்வரும் கிராமோதய சபை உறுப்பினர்கள் அவர் கட்கு அறிவிக்கப்பட்ட திகதி களில் வன்னி ஆயுதப்படை முகாமுக்கு வரும்படி அழைக் கப்பட்டுள்ளனர். 14ம் திகதி உலர்ந்தால்க்கட்டி கிரா மோதயசபை உறுப்பினர்கள். 15ம் திகதி நெடுங்கேணி கிரா மோதயசபை உறுப்பினர்கள் 16ம் திகதி புளியங்குளம் கிரா மோதயசபை உறுப்பினர் கள். [ஊ]

## கோட்டை எதிரில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்துக்கு முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது பாதுகாப்புக்கருதி இவ்வீதி தடை செய்யப் பட்டுள்ளதாக புளொட் இயக்கத்தினரின் அறிவித்தல் பலகை சத்திரத் துச் சந்தியில் காணப்படுகி றது. (ச-இ)

## கடலில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிடிக்கும் முயற்சியில் கனடா இராணுவ விமானங்கள் ஈடு பட்டுவருகின்றன.

இக் கப்பல் சீன அல்லது கொரிய நாட்டுக் கப்பலாக இருக்கலாமெனச் சந்தேகிக் கப்படுகிறது.

இதேவேளை இந்த 152பேரை யும் அவர்கள் விரும்பும் பட் சத்தில் இலங்கைக்குத் திருப்பி னுப்புவதற்கான நடவடிக் கைகளை மேற் கொள்ள கன டாவிலுள்ள இலங்கைத் தூத ரகம் முன்வந்துள்ளது.

### பிந்திக் கிடைத்த செய்தி

இதனிடையே இந்த 152 தமிழரும் மேற்குஜெர்மனியில் வசித்து வந்தவர்ளென்றும் பிரான்சிலிருந்தே புறப்பட்டுச் சென்றனரெனவும்மே. ஜேர் மன் பாராளுமன்ற உறுப்பி னர் ஒருவர் தெரிவித்துள்ளார். [சி-ஒ]

## அக்கரைப்பற்று...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த சமயம் எமது தரப்பினர் இவர்கள் மீது கிறனேட்டுக்களால் தாக்கிய தில் கமாண்டோக்கள்தரப்பில் பலர் காயமடைந்தனர் கமாண்டோக்கள் பின் வாங் கினர். இத்தாக்குதலின்போது எமது தரப்பில் சேதமெதுவும் இல்லை.

## யாழ். முனீஸ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புரியும் கோகிலன் மோகராசா (வயது 27) என்பவரே பலி யானவராவார்.

இவர் இரு குழந்தைகளுக் குத் தந்தையென்றும் சமீபத் தில் தான் ஒரு குழதை பிறந்த தென்றும் தெரிகிறது.

சடலம் பொதுமக்களால் எடுத்துவரப்பட்டு யாழ். ஆஸ் பத்திரி சவச்சாலையில் வைக் கப்பட்டுள்ளது. மார்பில் இர ண்டு துப்பாக்கிச் சூட்டுக் காயங்கள் காணப்படுகின்றன. (ச-இ)

## ராகிங்...

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

விடுதலை அமைப்பு ஒன்று எடுத்தநடவடிக்கையை ஆட் சேபித்து 7 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 7 நாட்க ளாக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்து வருவதுதெரிந் ததே.

எந்த விடுதலை அமைப்புக்கு மெதிராக தாம் இப்போராட் டத்தை நடத்தவில்லை என் றும் தமது கோரிக்கைகள் நிறைவேறும்வரை தமது போராட்டம் தொடரும் என் றும் பத்திரிகையாளர் மகா நாட்டில் வலியுறுத்தப்பட் டது. [ஊ]

யாழ். கச்சேரி கிளை

# ஆகஸ்ட் மாத ஒய்வூதிய கொடுப்பனவு

யாழ்ப்பாணம், வியாழன்.

இலங்கை வங்கிக் கச்சேரிக் கிளையில் ஒய்வூதியம் பெற்று வந்தவர்களுக்குரிய ஆகஸ்ட் மாதத்திற்கான ஒய்வூதியம் எதிர்வரும் 16ம், 17ம் திகதி களாகிய சனி, ஞாயிற்றுக்கிழ மைகளில் யாழ். கோட்டைக் கொடுப்பனவுக் காரியாலயத் தில் வைத்து வழங்கப்படும்.

இக்கொடுப்பனவுகள் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையுமே வழங்கப்படும்.

செப்டம்பர் மாதம் தொடக் கம் 15ம் திகதிக்கு அடுத்து வரும் முதற்சனிக்கிழமைகளில் குடிசார் ஒய்வூதியமும், ஆசிரி யர்களின் ஒயவூதியமும் வழங் கப்படும்.

அடுத்துவரும் திங்கட்கிழமை களில் விதவைகளின் ஒய்வூதிய மும், செவ்வாய்க்கிழமை, புதன் கிழமைகளில் மற்றையோருக் கான ஒய்வூதியமும் வழங்கப் படும்.

செப்டம்பர் மாதம் தொடக் கம் ஞாயிற்றுக்கிழமைகளில் எந்தவித ஒய்வூதியக் கொடுப் பனவுகளும் வழங்கப்படமாட் டாதென உதவி அரச அதிப ரும், பொதுசனத் தொடர்பு அதிகாரியுமான திரு. த. குல சேகரம் அரசாங்க அதிபர் சார் பில் தெரிவிக்கின்றார்.

ஆகஸ்ட் மாத ஒய்வூதியம் வழங்கப்படும் விபரம் வரு மாறு: 16ம்திகதி சனிக்கிழமை சிவில், ஆசிரியர் 'ஒய்வூதியம், 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை- விதவைகள், அனாதைகள், ஆசி ரிய விதவைகள், படைக்கல சேவிதர்கள் முதலானோர்க்கு வழங்கப்படும். (ச-இ)

## இன்று கூட்டம்

யாழ்ப்பாணம், வியாழன்.

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயம் சம்பந்தமாகவும், அப் பிரதேசங்களில் குடியிருக்கும் மக்களின் பாதுகாப்பு நலன் பற்றியும் ஆராய்வதற்கென கூட்டமொன்று இன்று மாலை யாழ்ப்பாணம் 4ம் குறுக்குத் தெரு 'சற்றடே றிவியூ' பணி யகத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தை மக்கள் நட வடிக்கைக்குழு ஏற்பாடு செய் துள்ளது. [கை]

## இன்று நயினை அம்பாள் திருமஞ்ச உற்சவம்

நயினாதீவு வியாழன்

நயினை அருள்மிகு நாக பூஷணி அம்பாள் ஆலய திரு மஞ்சஉற்சவம் இன்று வியா ழக்கிழமை நடைபெறும்.

அம்பாளின் திருமஞ்சம் சில மாதங்கட்கு முன் சேதமான மையால் இம்முறை திருக் கைலாய வாகனத்தில் அம் பாள் வீதிவலம் வருவார்.

வருடாந்த உற்சவத்தை யொட்டி 7 ந் திருவிழா முதல் நடைபெறும் அமுதசுரபியின ரின் அன்னதானம் வழமை போல் நடைபெறுகின்றது''

## வெளிநாடு பிரயாணம்

★ அமெரிக்கா ★ கனடா
★ ஜேர்மனி ★ பிரான்ஸ்

செல்லவிருக்கும் பிரயாணிகளுக்கு தகுந்த பிரயாண வசதிகள் செய்து தரப்படும்.

தொடர்பு:-
வ. நல்லையா,
அளவெட்டி.

(C 4059)


## நாவற்குழியல் ஷெல் தாக்குதல்

யாழ்ப்பாணம், வியாழன்

நாவற்குழி இராணுவ முகா மிலிருந்து நேற்றுமுன்தினம் இரவுநடாத்தப்பட்ட 'ஷெல்' தாக்குதலில் நாவற்குழிப்பகு தியிலுள்ள சில வீடுகள் சேத மடைந்துள்ளன.

போராளிகட்கும் இராணு வத்தினருக்கிமிடையே நடை பெற்ற நேரடி மோதலைய டுத்தே இந்த 'ஷெல்' தாக்கு தல் நடாத்தப்பட்டது, (ஒ)

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



குலசேகரம்
தேவசேகரம்
(ஒபறேய் தேவன்)
மலாவு: 17 - 4 - 1958
உதிர்வு: 14 - 8 - 1983

பாசமுள்ள தேவா! என்றும் உங்களை மறப் பதற்கில்லை.

பிரிவால் வாடும், அம்மா, அப்பா, அக்கா, அத் தான், தம்பி, தங்கைகள், உறவினர், நண்பர்கள்.
பலாலி - வீதி,
திருநெல்வேலி.
(C-4061)

## நாளை 47ம் நாள் கிரியை அஞ்சலி

### ஏ. பார்த்தீபன்

தோற்றம்:
12-08-1966
வீர மோட்ஷம்:
30-06-1986

30-06-86 அன்று மற் றையோர் உயிர்காக்க வேண்டி தன்னுயிரை துச்சமென மதித்து வீர மரணமெய்திய பார்த்தி யின் மரண ஊர்வலத் திலும் ஏனைய அஞ்சலி களிலும் 01-07-86ல் பங்கு கொண்டு பலவகையான அஞ்சலிகளையும் உதவி களையும் நல்கிய பல்லா யிரக்கணக்கானவர்க்கும் எமது உளமார்ந்தநன்றி.

அன்னாரது 47ம் நாள் கிரியை அஞ்சலி 15-8-86 வெள்ளிக்கிழமை காலை 8 00மணிக்கு கீரிமலையி லும் 10-00மணிக்கு எமது இல்லத்திலும் நிகழும் நினைவுத்தூபித் திறப்பும் நடைபெறும். இவற்றில் கலந்துகொள்ளுமாறு அழைக்கிறோம்.

சகோதரர்கள்.
சகோதரிகள்,
பெற்றோர்,
காலையடி
பண்டத்தரிப்பு.
[C-4065]

# ‘சமுதாயப்பணிக்காக எழுதும் ஈழத்து எழுத்தாளர்கள்’

## நூல்வெளியீட்டு விழாவில் விரிவுரையாளர்

யாழ்ப்பாணம், வியாழன்

''நவீன இலக்கியம்மரபுவழி இலக்கியத்தினின்றும் வேறுபட்டது. இலங்கையைப் பொறுத்தவரை இலக்கியத்தை விற்றுப் பிழைக்கும் எழுத்தாளர்கள் என்று யாரும் இல்லை. ஆரம்பத்தில் சிலர் புகழுக்காக எழுதினாலும் பின்னர் சமுதாயப் பணிக்காக எழுதுவார்கள் 1965, 70 களில் கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரின் வழிகாட்டுதல்களின் கீழ் சமூகப்பார்வையுடன் இலக்கியங்களைப் படைக்கும் பல எழுத்தாளர்கள் தோன்றினர்.

ஏனைய பெண் எழுத்தாளர்களுடன் நோக்கும்போது கோகிலா மிகவும் வேகமாகவும் சிறப்பாகவும் உளவியல் ரீதியாகவும் எழுதி வளர்ந்து வருகின்றார். எதிர்காலத்தில் நல்ல இலக்கியங்களைப் படைக்கக் கூடியவர் என்ற நம்பிக்கை தெரிகிறது.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியன் நெல்லியடி மத்திய மகாவித்தியாலய இராசலிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற கோகிலா மகேந்திரனின் ‘துயிலும் ஒரு நாள் கலையும்’, ‘பிரசவங்கள்'' அறிமுக விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

கட்டைவேலி நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கூட்டுறவுக் கலாசாரப் பெருமன்றத் தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை விழாவிற்குத் தலைமை வகித்தார். இவர் தமது உரையின்போது: ''எமது எழுத்தாளர்களை உளவியல்ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் ஊக்குவிக்கு கடமை எமக்குண்டு. உண்மையான வாசகன்தான் உண்மையான எழுத்தாளனாக இருப்பான். வாழும் சூழலை அழகாகச் சித்ரிக்கும் கோகிலா மகேந்திரன் பெண்ணிலை வாதத்திற்காக மிகவும் பாடுபடுகிறார். இன்றைய சூழலில் இவர் இதிலிருந்து தட்பவும் முடியாது. தெல்லிப்பழையைச் சேர்ந்த இவர் வதிரியில் திருமணம் முடித்தகாரணத்தினால் இந்தப் பிரதேசத்திற்கும் உரியவராகிறார்'' என்றார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வைத்திய கலாநிதி எம் கே. முருகானந்தன் பேசுகையில், ''விமர்சனத்துறை இங்கு நன்றாக வளர வேண்டும். வெறும் முதுகு சொறியும் விமர்சகர்கள் இருக்கக்கூடாது. விஞ்ஞான பூர்வமான பார்வையுடன் எழுதப்படும் கோகிலாவின் படைப்புக்களில் பொன்மொழிகளும் மேற்கோள்களும் அதிகம் காணப்படுகின்றன. எதிர்காலத்தில் ஆஸ்பத்திரி வாழ்வை வைத்து இவர்நாவல் எழுத இருப்பதாக அறிகிறேன். ஆர்வமாக இதனை இவர் செய்ய வேண்டும்'' என்றார்.

திருவாளர்கள் நெல்லை க. பேரன், கருணையோகன், குப்பிளான் ஐ சண்முகன், எஸ் வன்னியகுலம், தெணியான் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர்.

திருமதி கோகிலா மகேந்திரன் பதிலுரையில் நடுநிலை விமர்சகர்களின் பாராட்டைப் பெறுவதே வாழ்க்கையின் வெற்றிகரமான அம்சமாகும் இங்கு தெரிவிக்கப்பட்ட பல ஆக்கபூர்வமான விமர்சனங்களை நான் கருத்தில் கொள்வேன்'' என்றார்

கலாசார கூட்டுறவுப் பெருமன்ற அமைப்பாளர் திரு நெல்லை க. பேரன் நன்றி கூறினார். (ஆ)

---

# யாழ். பல்கலைக்கழகத்தில் ஆலோசனைக் குழு உதயம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தற்சமயம் ராகிங் சம்பந்தமாக ஏற்பட்டுள்ள பிரச்னைகளையிட்டு மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுப்பதுபற்றித் தீர்மானிக்க ஆலோசனைக் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் காலை பல்கலைக்கழக மாணவர்கள் கூடி ஆலோசனைக் குழு ஒன்றினைத் தெரிவுசெய்தனர்.

தொடர்ச்சியாகச் செய்யப்பட வேண்டிய நடவடிக்கைகளையிட்டு தீர்மானம் எடுப்பது இக்குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிகிறது. [ச]

---

# மாடு வெட்டும் நிலையம்

மாவிட்டபுரம், புதன்

காங்கேசன்துறை உப அலுவலக எல்லைக்குள் மாடு வெட்டும் நிலையம ஒன்று அமைக்கப் படவுள்ளது.

இப்பகுதியில் மாடு வெட்டும் நிலையம் இல்லாமையால் வேறு இடங்களிலிருந்து மாட்டிறைச்சி கொண்டு வரப்பட்டு உப அலுவலக அனுமதியுடன் இயங்கும் இறைச்சிக் கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வந்தது

அதிகாரிகளின் மேற்பார்வையின்றி இவ்வாறு இறைச்சி விற்கப்படுவது சுகாதாரத்துக்கு ஆபத்தென மக்கள் முறைப்பாடு செய்ததையடுத்து உப அலுவலக எல்லைக்குள் நிலையம் ஒன்றை அமைத்து அதிகாரிகளின் மேற்பார்வையில் மாடுகளை வெட்ட உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் த. மகாலிங்கம் ஏற்பாடுசெய்துள்ளார். [எ]

---

# புதிய உப மின் நிலையம்

மாவிட்டபுரம், புதன்

தையிட்டியில் அமைக்கப்பட்டுள்ள புதிய உப மின் நிலையத்தை விரைவில் இயங்கச் செய்ய நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

காங்கேசன்துறை உப அலுவலக எல்லைக்குள் உள்ள தையிட்டி, மயிலிட்டி, காச நோய் ஆஸ்பத்திரி ஊறணி போன்ற பகுதிகளுக்கு மேலும் கூடுதலான மின்சாரத்தை வழங்கும் நோக்குடன் தையிட்டியில் உப மின் நிலையம் ஒன்றை அமைக்க தீர்மானிக்கப்பட்டு கட்டிட வேலைகள் பூர்த்தியாகியுள்ளன.

இருந்த போதும் தற்போதய சூழ் நிலையில் மின்சார உபகரணங்கள், ரான்ஸ் போமர் ஆகியவற்றை கொண்டு வந்து இணைப்பதில் தாமதம் ஏற்பட்டிருந்ததால் இந்த உப மின் நிலையம் இயங்க முடியாமல் இருந்தது

இது குறித்து உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. த. மகாலிங்கம் மேற்கொண்ட நடவடிக்கையை அடுத்து அடுத்த மாதத்தில் இந்த உப மின் நிலையத்தை பூர்த்தியாக்கி மின்சாரத்தை வழங்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. [இ]

---

# ஏழாலையில் நூலகம்

வசாவிளான், புதன்

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை ஏழாலை உப அலுவலகப் பகுதியில் பொதுசன நூலகமொன்று அமைக்கப் படஉள்ளது.

இப் பொதுசன நூலகம் அமைப்பதற்காக 1986ம் ஆண்டிற்கான யாழ் மாவட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து $1\frac{1}{2}$ லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

மேலும் இந்நூலகம் ஏழாலை உப அலுவலக வளவினுள்ளேயே நிறுவப்படும் எனவும் விரைவில் இதற்கான கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்பட உள்ளன எனவும் மேற்படி அலுவலகத்தின் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. அ. இராமநாதன் தெரிவித்துள்ளார். [இ]

---

# பெனசிர் பூட்டோ கைது

இஸ்லாமாபாத். ஆக. 14

பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் செல்வி பெனசிர் பூட்டோ கராச்சி விமான நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

பாகிஸ்தான் சுதந்திர தினத்தையொட்டி லாகூரில் ஜனநாயக மீட்பு இயக்கத்தினர் அரசியல் ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை இன்று நடாத்த இருந்ததைத் தடுக்கு முகமாகவே செல்வி பெனசிரும் இந்த இயக்கத்தின் பல தலைவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எனினும் எதிர்க் கட்சிகள் இன்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடாத்தவுள்ளனர். (சி)

---

அரசின் தமிழ் ‘பயங்கரவாதிகள்’ பதம்:

# இந்தியா கடும் ஆட்சேபம்

டாக்கா, ஆகஸ்ட் 14

இலங்கையில் ஆயுதம் தாங்கிய தமிழ் பிரிவினை வாதிகளை ‘பயங்கரவாதிகள்’ என இலங்கை அரசாங்கம் விபரிப்பதற்கு இந்தய அரசு தனது ஆட்சேபத்தினை தெரிவித்துள்ளது

டாக்காவில் நேற்று முன் தினம் ஆரம்பமான இரண்டு நாள் ‘சார்க்’ வெளிநாட்ட மைச்சர்கள் மாநாட்டிலேயே இந்தியா இந்த ஆட்சேபத்தை தெரிவித்தாக மாநாட்டு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

---

# திருத்தம்

13-08-86ம் திகதிய ஈழநாடு பத்திரிகையில் ‘இனப் பிரச்னைக்கு ஒரு பொருளாதாரத் தீர்வு’ என்ற கட்டுரையில் செலவினங்கள் சம்பந்தப்பட்ட புனருத்தாரணக் கணக்கில் மீன்பிடி சமூகத்திற்கு ரூபா 340,000 என்றிருப்பதனை 40000 எனவும் கூட்டுத்தொகையில் 440,000 என்றிருப்பதனை 140000 எனவும் திருத்திக்கொள்ளவும்

இதேபோல் இறுதியில் மொத்தம் 252000 என்றிருப்பதனை 225000 எனவும் திருத்திக் கொள்ளவும்.

---

வீடுகளில் தங்கியுள்ள

# அகதிகள் நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது

சாவகச்சேரி, புதன்

சாவகச்சேரி தொகுதியின் பல கிராமங்களில் உறவினர், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருந்த திருமலை அகதிகளுக்கான அரச நிவாரண உதவிகள் இம்மாதம் பெருமளவில் நிறுத்தப்பட்டுள்ளது

இந்த அகதிக் குடும்பங்கள் அகதிமுகாம்களில் இருந்தால் மட்டுமே இவர்களுக்கான நிவாரண உதவி வழங்கப்படலாம் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளதாக, திருமலையில் பாதிக்கப்பட்டு சாவகச்சேரிப் பகுதிகளில் இருக்கின்ற அகதிக்குடும்பங்கள் மூலம் தெரிய வந்துள்ளது. (இ)

---

சாவகச்சேரியில்

# மின்நிலுவைப் பணமாக 20,000ரூபா செலுத்தப்பட்டது

சாவகச்சேரி, புதன்

இலங்கை மின்சாரசபை மூலம் மின்சாரம் பெறுகின்ற சாவகச்சேரி மின்பாவனையாளர்கள் பலர் பலகாலமாக மின்கட்டணத்தைக் கட்டாமல் இருந்து வந்துள்ளனர்.

இதன்காரணமாக இலங்கை மின்சாரசபையின் தலைமையகத்திலிருந்து இவர்களுக்கான ''சிவப்பு அறிவித்தல் கடந்த வாரம் அனுப்பிவைக்கப்பட்டது.

இந்த சிவப்பு அறிவித்தல் கிடைக்கப்பெற்றதும் மின்பாவனையாளர்கள் தமது மின் நிலுவைக் கட்டணங்களை சாவகச்சேரி மக்கள் வங்கியில் செலுத்தியுள்ளனர்.

கடந்த மூன்று தினங்களில் மட்டும் சுமார் 20,00 ரூபா மின் நிலுவைக்கட்டணமாக மின்பாவனையாளர்கள் மக்கள் வங்கிமூலமாக இலங்கை மின்சாரசபைக்கு அனுப்பினர் எனத் தெரியவந்துள்ளது.

---

# கிளிநொச்சியில் நெல் விலை வீழ்ச்சி

நெடுந்தீவு, புதன்.

கிளிநொச்சிப் பகுதியில் சிறுபோக அறுவடை இப்பொழுது ஆரம்பமாகியுள்ளது.

4ம் வாய்க்கால், அக்கரையான்குளம், பரந்தன், முரசுமோட்டைப் பகுதிகளிலேயே அறுவடை ஆரம்பமாகியுள்ளது

சிறுபோகத்தின் துரித அறுவடை இன்னும் இருவாரங்களில் தொடங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இப் பகுதியில் நெல்லின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது. அக்கரையான் பகுதியில் ஒரு மூடை நெல் 260 ரூபாவாகவும், கிளிநொச்சிப் பகுதியில் 275 ரூபா தொடக்கம் 300 ரூபா வரையுமாக இருந்து வருகின்றது.

அறுவடை தீவிரமடைய நெல்லின் விலை மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. [இ]

---

# மதியஉணவு வழங்கினர்

சாவகச்சேரி புதன்

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 31வது ஆண்டு விழாவினையொட்டி நிலையத்தினர் கைதடி அகதிகள் முகாமில் இருக்கும் கிளிநொச்சி அகதிகளுக்கு கடந்த 12ம் திகதி மதிய உணவினை அன்பளிப்பாக வழங்கினர். [சி]

---

# யாழ். வந்த மண்ணெண்ணை தடுத்துவைப்பு

வவனியா, புதன்

அனுமதிப்பத்திரமன்றி யாழ். குடா நாட்டிற்கு 25 பரல் மண்ணெண்ணையை ஏற்றி வந்த வாகனமொன்று வவனியா பொலிஸரால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

சாரதி நடத்துநர், உட்பட வாகனமும் வவனியா நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோதுசாரதியும் நடத்துநரும் தலா ஆயிரம் ரூபா பிணையிலும், வாகனம் பதினாயிரம் ரூபா பிணையிலும் விடப்பட்டுள்ளன (ஓ)

---

வடபகுதி சமாதானசபைகள்

# “ஒரே அமைப்பின் கீழ் இயங்கவேண்டும்”

நெல்லியடி, புதன்.

''வடபகுதியில் இன்று இயங்கிவரும் சகல சமாதான சபைகளும் ஒரே அமைப்பின் கீழ், ஒரே சட்டக் கோவையின் கீழ் இயங்கவேண்டியது அவசியம். இடத்திற்கிடம், கிராமத்திற்குக் கிராமம் சட்டங்கள் வேறுபடுவது விரும்பத்தக்கதல்ல''

இவ்வாறு கரவெட்டி-நெல்லியடிப் பகுதிக்கான பிரஜைகள் குழுக் கூட்டத்தில் உரையாற்றிய மேற்படி பிரஜைகள் குழுச் செயலாளர் திரு எஸ். செல்லையா குறிப்பிட்டார்.

கரவெட்டி திரு இருதயக் கல்லூரி மண்டபத்தில் தலைவர் திரு. மகாலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது:-

''சட்டமென்பது பிரதேசத்திற்குப் பிரதேசம், சமூகத்துக்குச் சமூகம் வேறுபடக் கூடிய நெகிழ்வானதொன்றல்ல. சட்டம் சகலருக்கும் பொதுவானதாக இருக்கவேண்டும். எனவே, எதேச்சாதிகாரமாக, தன்னிச்சையாக இயங்கும் சமாதானச் சபைகள், இதர சமாதானச் சபைகளுடன் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டும்

ஒவ்வொரு பிரதேசத்திலும் இயங்கும் சமாதானச் சபைகளுக்கு மேன்முறையீட்டு மன்றங்களாக ஒரு மத்திய சபை இயங் வேண்டும். இச்சபையில் நீதியுணர்வுடைய உறுப்பினருக்கு உதவியாகச் சட்டத்தரணிகளும் இயங்க வேண்டியது அவசியம்

தீர்ப்புகள் மனச்சாட்சி அடிப்படையில் மட்டுமன்றி ஓரளவுக்குச் சட்டத்தையும் ஆதாரமாகக் கொள்வது விரும்பத்தக்கது. மேலும், ஒவ்வொரு வழக்கிலும் அதன் தொடர்பான பணப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு பணம் அறவிடவும் வேண்டும்''.

# தென் லெபனுனில் ஐ. நா. படை, முஸ்லிம் தீவிரவாதப் பிரிவு நீண்டநேர மோதல்!

பெய்ரூட், ஆக 13

**தென்லெபனுனில் முஸ்லிம் தீவிரவாதப் பிரிவொன்றுக்கும் ஐ. நா. பாதுகாப்புப் படைப்பிரிவுக்குமிடையே நேற்று நீண்ட நேர கடும் மோதல் இடம்பெற்றது. இம்மோதலில் மூன்று முஸ்லிம் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 17 பிரெஞ்சு துருப்பினர்காயமடைந்தனர்.**

சுமார் 14 மணிநேரம் இந்த மோதல் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது பெய்ரூட்டில் ஐ. நா. சமாதானப் படைப் பிரிவுக்கும் அங்குள்ள தீவிரவாதப் பிரிவுக்குமிடையே இடம் பெறற முதலாவது நீண்டநேர மோதல் இது எனக்கூறப்பட்டது.

14 மாதங்களுக்கு முன்னர் இஸ்ரேலியப்படைகள் தென் லெபனுனிலிருநது வாபஸ் பெற்றதைத் தொடர்ந்து ஐ. நா. படைகள் லெபனுனில் சேவைக்கமர்த்தப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

## காத்திரமான தேகநிலையில் மகாராணியார்!

### 152 படிக்கட்டுகளை ஏறி இறங்கினுர்

லண்டன், ஆக 13

பிரிட்டன் அரசி எலிசபெத் மகாராணியார் 152 படிக்கட்டுக்களை ஏறி இறங்கித் தாம் சுகதேகியாக இருப்பதை நிரூபித்தார்.

இவர் ஸ்கொட்லாந்தின் வட கரையிலுள்ள வெளிச்ச வீடொன்றைச் சென்று பார்வையிட்டார். புராதனமான இந்த வெளிச்ச வீட்டின் உச்சிப்பகுதியை 152 படிக்கட்டுக்களை ஏறிச் சென்றேயடைய முடியும்.

மகாராணியார் எதுவித தயக்கமுமில்லாமல் இந்த 152 படிக்கட்டுகளையுப் ஏறிக் கடந்து சென்று அந்த வெளிச்ச வீட்டின் உச்சியில் நின்று அவர் கையசைத்தார்

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இருதய நோய் குறித்த சில மருத்துவ பரிசோதனைகளுக்கு மகாராணியார் உட்பட்டிருந்தார். இச் சோதனைகள் அவர் சாதாரண நிலையில் இருப்பதை உறுதிப் படுத்தின.

ஆயினும் பொதுமக்கள் மத்தியில் மகாராணியார் தேகநிலை குறித்து ஐயப்பாடு நிலவி வந்தது. எனவே தமது உடல் நிலை சுமுக நிலையில் இருப்பதை நிரூபிக்கும் வகையிலேயே 60 வயதான மகாராணியார் அந்த 152 படிக்கட்டுகளையும் ஏறி இறங்கினுர் என்று தெரிவிக்கப்பட்டது.

## லோக்சபாவில் தமிழக சட்டமேலவைகலைப்புமசோதா

புதுடில்லி, ஆக 13

தமிழக சட்ட மேலவை சபையைக் கலைக்கும் மசோதா ஒன்று லோக்சபாவில் நேற்றுத் தாக்கல் செய்யப்பட்டது.

இம் மசோதா தாக்கல்செய்யப்பட்டபோது லோக்சபாவிலிருந்த தி. மு. க உறுப்பினர்கள் இருவர் வெளிநடப்பு செய்தனர்.

இதேவேளை இம்மசோதா லோக்சபாவின் சகலதரப்பினராலும் வரவேற்கப்பட்டது. தமிழக சட்டமேல் சபையைக் கலைப்பது ஓர் ஆக்கபூர்வமான நடவடிக்கை எனவும் அங்குகருத்துவெளியிடப்பட்டது.

மத்திய அரசும் தமிழக அரசின் இந்த சட்ட மேலவையைக் கலைக்கும் திட்டத்தை வரவேற்றுள்ளது.

## கங்கையில் நாட்டுப் படகு கவிழ்ந்தது; 70பேர் மூழ்கினர்

புதுடில்லி, ஆக. 13

பீஹார் மாநிலத்திலுள்ள கத்திகார் என்ற இடத்தில் கங்கை நதியில் நாட்டுப் படகொன்று மூழ்கியதில் 70க்கு மதிகமானேர் மூழ்கினர்.

உள்ளூர்ப் பணியில் ஈடுபட்டிருந்தவேளையிலேயே இந்தப் படகு மூழ்கியதாகச் சொல்லப்படுகின்றது.

இப்படகுமூழ்கியதையடுத்து இதில் பயணமானேரில் 24 பேரின் சடலங்கள் மட்டுமே கண்டெடுக்கப்பட்டன. ஏனையோரின் சடலங்களைத்தேடும் பணி தொடர்ந்து இடம்பெறுகின்றதெனத் தெரிவிக்கப்பட்டது

வட இந்தியாவில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கே இந்த படகு மூழ்கியமைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது.


பிரயாண ஒழுங்குகள்

சவூதி-கிளீனேர்ஸ்
குவைத்-கிளீனேர்ஸ்
ஈராக்—ஆஸ்பத்திரி கிளீனேர்ஸ்

ஆகிய நாடுகளுக்கு வருமான ஒழுங்குகள்
அத்துடன்
பாஸ்போட், பொன்ட், ரிக்கற்றிங்
ஆகியனவும் செய்து கொடுக்கப்படும்.

யூனிவேர்சல்
ஏஜென்சி
125 (455), ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

[ ஆயுர்வேதக்கல்லூரிக்கு அருகாமையில் பெற்ரோலியம் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக ]

(A 1044)


## இருபாலையில் இளைஞர் ரோந்து

யாழ்ப்பாணம், வியா:

அண்மைக்காலமாக இருபாலையில் திருடர் தொல்லை அதிகரித்து வந்தமையைத் தொடர்ந்து இருபாலை கிழக்கு சன சமூக நிலையத்தின் கீழ் சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட இளைஞர்கள் தினமும் இரவு வேளைகளில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். [ஒ]

## வான் கடத்தப்பட்டது

சுண்டுக்குளி, புதன்

ஆனைக்கோட்டையில் உள்ள வீடொன்றில் வைத்து கடந்த சனிக்கிழமை இரவு 'ஈ. எல் எவ்' வான் ஒன்று இனந் தெரியாதவர்களினல் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

இச் சம்பவம் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த துரைராசா பாலச்சந்திரன் என்பவரின் வீட்டில் இடம்பெற்றுள்ளது. கடந்த சனி இரவு வீட்டு முற்றத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இவ் வாகனத்தை வீட்டார் அதிகாலையில் எழுந்து பார்த்த போது வாகனம் காணுமல் போனது தெரிய வந்துள்ளது.

## இன்றைய பலன்

மாதம்—ஆடி
திகதி— 29 (1986-8-14)
கிழமை வியாழன்
திதி—நவமி பி. ப. வரை
நக்ஷத்திரம் — அனுஷம் பி ப வரை

மேடம்:- துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும் இன்று அதிக பேச்சை தவிர்க்கவும். வரவிலும் தடையுண்டு

இடபம்:- எதிர்பார்த்த இன்பம்இன்று உங்களைஅணைத்துக் கொள்ளும் ஆரம்பத்தில் முட்டுக்கட்டை போட்டவர்கள ஆதரவு தருவர்.

மிதுனம்:- தொழில் துறையில் நஷ்டமுண்டு. புதிய முதலீடுகளை ஒத்திவைக்கவும் நண்பரின் கடிதம் வேதனை தரலாம்.

கடகம்:- தெய்வ நம்பிக்கை மேலிடும், பொதுப்பணிகளில் நாட்டம். பிறக்கும் பிதாவழி அதரவும் உண்டு.

சிங்கம்:- தொழில்துறையில் நல்ல வருமானம் உண்டு மகிழ்ச்சிகரமான பிரயாணத்திற்கும் இடமுண்டு. புதிய திருப்பமும் ஏற்படும்.

கன்னி:- நீண்ட நாள் பிணக்கு நிவர்த்தியாகும் வெளியிடத் தொடர்புகள் மூலம் செல்வாக்குப் பெருகும். பதவி உயர்வுக்கும் இடமுண்டு.

துலாம்: அதிக சிந்தனை சிறிய தலையிடியை கொடுக்கும். உடல் நலம் பாதிக்கப்படலாம். பொருட் செலவுமுண்டு.

விருச்சிகம்:- ஆத்திரப்படுவதால் அருமையான சந்தர்ப்பத்தையிழக்க நேரிடும். பூமிப் பிணக்கும் தோன்றக்கூடும். அமைதி வேண்டும்.

தனுசு:- நண்பர்கள் ஆதரவுண்டு வாழ்க்கையில் புதிய திருப்பம் ஏற்படும். திடீர் வரவுமுண்டு.

மகரம்:- ஆசாரக் குறைவுக்கும் அதிக பொருள் செலவுக்கும் இடமுண்டு ஒருபெண் மூலம் அவப்பெருக்கும் இடமுண்டு.

கும்பம்:- மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம் பெறும், மாதுருவழியால் தனவரமுண்டு வாகனச் சாரதிகள் கவனம் வேண்டும்.

மீனம்:- புத்திக் கூர்மையுடன் எண்ணங்கள் தலைதூக்கும். புத்திரர்களால் புகழும் கிடைக்கும் இறை நம்பிக்கையுடன் இல்லத்திலும் இனிமை தவழும்.

திருமலை
வே. ரவீந்திரன்

## கிளிநொச்சிக்கு புதிய அரச அதிபர்

யாழ்ப்பாணம், வியா.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபராகவிருக்கும் திரு ஜெக செந்தில்நாதன் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்

திரு செந்தில்நாதன் மன்னர் மாவட்ட அரச அதிபராக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவரின் இடமாற்றத்தினைத் தொடர்ந்து இதுவரை மேலதிக அரசாங்க அதிபராகக் கடமையாற்றிவந்த திரு கே. பொன்னம்பலம் முல்லைத்தீவு அரச அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். (ரா)

## வாகன அனுமதிப்பத்திரம் இல்லை

யாழ்ப்பாணம், வியா

நல்லூர் உற்சவகாலத்தில் வாகனப் போக்குவரத்துக்கு தடைசெய்யப்பட்ட பகுதிகளுள் வசிக்கும்மக்களுக்கு இம்முறை வாகன அனுமதிப் பத்திரம் வழங்கப்படமாட்டாது என்று யாழ். மாநகர ஆணையாளர் திரு சீ. வீ. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

இந்தபோக்குவரத்து தடைகள் சாதாரண திருவிழாநாட்களில் மாலை 7.15 மணிக்குப் பின்பும், விசேஷ உற்சவநாட்களில் இரவு 8 15 மணிக்கு பின்பும் அகற்றப்படும்.

எனினும் வியாபாரிகள் மதியம் 12 30 மணிக்கும், 2 30 மணிக்கும் இடையில் மட்டுமே போக்குவரத்து தடைசெய்யப்பட்ட இப்பகுதியினுள் இருக்கும் வியாபார நிலையங்களுக்கு பொருட்களை கொண்டு செல்லலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)


BECON

(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
யாழ்ப்பாணம்.

88 A/L 2-வது பிரிவு

பொருளியல் — திரு. வரதராஜன்
கணக்கியல் — திரு. மரியதாஸ்
வர்த்தகம் — திரு. ரட்ணம்
அளவையியல் — திரு. S S. மனேகரன்
இந்துநாகரீகம் — திருமதி அருள்நங்கை
தமிழ் — திரு. நாகேஸ்வரன்

ஆரம்பம்: 16-8-86 சனி 8-30

87 A/L 3-வது பிரிவு சனி 9-00

88 A/L 2-வது பிரிவு

விலங்கியல் — திரு. தம்பிராஜா
தாவரவியல் — திரு. சர்வானந்தா
பௌதிகவியல் — திரு. யோகானந்தா
இரசாயனவியல் — திரு. அன்ரன்

ஆரம்பம்: சனி 8-30

(A 1043)

## 1-வது பிறந்ததின வாழ்த்து



**செல்வி சுகந்தா ஆறுமுகம்**

ஆறுமுகம் - இராஜமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வி சுகந்தா தனது முதலாவது பிறந்தநாளை (14-8-86) இன்று மதுரை பாளையங் கோட்டையில் வெகு விமரிசையாக கொண்டாடுகிறார். இவரை அம்மம்மா, கணேஷ்சித்தப்பா, மாலா சித்தி, கோணேஸ் சித்தப்பா, ராஜினி சித்தி, லதா சித்தி ஆகியோர் பல்கலைகளும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றனர்.

பிறின்ஸ் ஸ்ருடியோ,
C 3995 சுன்னாகம்.

## 1-வது பிறந்ததின வாழ்த்து



**செல்வி பா. சாயினி**

நெல்லியடி நாவலர் மடம் சாயினி இன்டஸ்யலைச் சேர்ந்த பாஸ்கரன்-ஜெயந்தினி தம்பதிகளின் செல்வப் புதல்வி சாயினி இன்று முதலாவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார், யோகா, சுகா, தங்கா, சித்திமார், ரூபன், மோகன், மாமாமார், பூட்டன்மார், பூட்டிமார், பேரனமார், பேத்திமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், அண்ணன்மார், அக்காமார், உற்றார், உறவினர் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறார்கள். (A 1133)

## கிளிநொச்சி வைத்திய சாலையை திறப்பதில்சிரமம்

கிளிநொச்சி, புதன்

கடந்த இரு மாதகாலமாக மூடப்பட்டுக்கிடக்கும் கிளிநொச்சிமாவட்ட அரசாங்க ஆஸ்பத்திரியை திறப்பதனால் பொதுமக்கள் எந்தவித நன்மைகளையும் அடையப்போவதில்லை எனவும் இராணுவமுகாம் ஆஸ்பத்திரிக்கு அருகில் இருப்பதனால் அநேக கஷ்டங்கள் உருவாகுமெனவும், இராணுவமுகாம் அகற்றப்படாத வரை ஆஸ்பத்திரியை திறப்பதால் எவ்வித அர்த்தமும் இல்லை என்றும் கிளிநொச்சி மாவட்ட ஆஸ்பத்திரி அபிவிருத்திச்சபைத்தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கிளிநொச்சியில் உள்ளசகல கிராமிய ஆஸ்பத்திரிகளுக்கும் போதிய டாக்டர்களையும், ஊழியர்களையும் நியமிக்க வேண்டும் எனவும் சகலவிதமான மருந்துகளையும் இந்த ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்ப வேண்டும் எனவும் அம்புலன்ஸ் சேவையும் யாழ்ப்பாணத்திற்கும் கிளிநொச்சிக்கும் நடத்த வேண்டும்என்றும் மாவட்டவைத்திய அதிகாரி கிளிநொச்சியில் உள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் இருந்து பணி புரிய வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நினைவஞ்சலி

யாழ்ப்பாணம், வியா.

84 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 13 ம திகதி தென்மராட்சி மேற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க வளவிற்குள் வைத்து இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட மேற்படி சங்க ஊழியர்கள் மூவருக்கும் ஏழு பொது மக்களுக்கும் அஞ்சலி செலுத்தும் முகமாக இன்று கைதடியில் இரண்டாவது ஆண்டு நினைவு அஞ்சலி செலுத்தப்படவுள்ளது.

## ஓய்வு பெற்றார்



பன்னாலைக் கிராமத்தைச் சொந்த இடமாகக்கொண்டு 21 வருடம் நல்லாசிரியராகவும் 15 வருடம் சிறந்த அதிபராகவும் அளப்பரிய கல்விச் சேவை செய்த உயர் திரு வை. பொன்னையா அவர்கள் பாராட்டுதற்குரியவர்.

சுன்னாகம் குமாரசாமிப் புலவரின் அபிமான மாணவர் விழிசிட்டி பண்டிதர் சி. கதிரிப்பிள்ளை அவர்களிடம் இலக்கண இலக்கியம் கற்று மகாஜன சிற்பி. ஜெயரட்ணம் அவர்களிடம் ஆங்கிலம் கற்று இச்சான்றோர் இருவரையுமே தன் நல்வழி காட்டிகளாகக் கொண்டு ஆசிரிய சேவையிற் சிறந்தவர் இவர்.

பல ஆண்டு காலம் சைவ வித்தியா விருத்திச் சங்கப் பாடசாலைகளில் இலட்சிய நோக்கோடு அரும்பணியாற்றி மகாஜனக் கல்லூரி ஆரம்ப பிரிவு அதிபராயிருந்து, பின்னர் மலை நாட்டின் பல பகுதிகளிலும் அதிபராக அருஞ் சேவையாற்றி ஈற்றில்தான் ஆரம்பக் கல்வி பயின்ற பன்னாலை சேர் சனகசபை வித்தியாலயத்திலேயே அதிபராக இருந்து அண்மையில் ஓய்வு பெற்றார்.

கடமை நேரத்தின் பின்பும், விடுமுறை காலங்களிலும் தன் மாணவர்க்குக் கல்வி புகட்டும் இயல்பு ஆரம்ப காலம் முதல ஓய்வு பெறும் வரையில் இவரிடம் குடி கொண்டிருந்தது. இதனால் அபிமானமுள்ள மாணவர் அநேகரைப் பெற்றார். இவரைத்தம் ஆசிரியர் என்று சொல்வதிற் பெருமைபெறும் இவரின் மாணவர் நாட்டின் நாலாதிசைகளிலும் சிறந்த வைத்திய அதிகாரிகளாகவும், விளங்குகின்றனர்.

'நல்லாசிரியனே சமுதாயத்தின் வழிகாட்டி' எனும் பொன் மொழிக்கு இலக்கியமாக அகத்தும் புறத்தும் தூய்மையான சேவை செய்யும் இவர் இலக்கணகர்த்தா காட்டிய நல்லாசிரியர்க்கோர் உதாரண புருஷராவர்.

நிறைவான மனமும், குறைவற்ற கல்வியும் ஆழமான சமூகப்பார்வையும், உயரிய இலட்சியமும் கொண்டு கல்விச் சேவையில் வெற்றிகண்ட இவர் ஆசிரியர்கட்கு மட்டுமன்றி எல்லோர்க்குமே உதாரண புருஷராவார்.

வெள்ளத்தனைய மலர் நீட்டம்.
மாந்தர் தம் உள்ளத்தனைய துயர்வு

எனும் வள்ளுவர் வாக்கின் வெற்றியையும் இவரிற் காண்கின்றோம்.

இவர் தம் மாணவ உலகு நன்றி நிறைந்த உள்ளத்தோடு வாழ்த்தி நிற்கின்றது.

சு. செல்லத்துரை
பழைய மாணவன்.

## குடும்பப் பங்கீட்டு அட்டைகள் விநியோகம்

சுண்டுக்குளி, புதன்

யாழ். உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் யாழ். மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களுக்கும்குடும்பப் பங்கீட்டு அட்டைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இப் பங்கீட்டு அட்டைகள் உதவி அரசாங்க அதிபர்காரியாலயங்கள்மூலம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இவற்றை ஒவ்வொரு குடும்பத்தினரும் 3 ரூபா செலுத்தி பெற்றுக் கொள்ளலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உணவுக் கப்பல்கள்

சுண்டுக்குளி, புதன்

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு நேற்றுமுன் தினம் இருகப்பல்கள் உணவு பொருள்களுடன் வந்துள்ளன. இவற்றில் ''மாத்தறை'' என்னும் கப்பல் 974 தொன் மாவும் ''ருகுணு'' 700 தொன் சீனியையும் ஏற்றிவந்துள்ளன.

இவ்விரு கப்பல்களிலிருந்தும் பொருட்கள் இறக்கும்வேலைகள் நேற்று முதல் துரிதமாக நடைபெறுகின்றன.

## பின்னுறுதிக் கட்டளை அறிவித்தல்

**மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்**

வட்டுக்கோட்டை கிழக்கு என்னுமிடத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா இராசரத்தினம் என்பவரின்மரணசாதனம்எழுதப் பட்ட மரணச் சொத்துக்களின் விடயத்தில்

— மரணமெய்தியவர்.

மரணசாதன நிர்வாயாதிக்கம் } இல ரி/269

கந்தையா இராசரத்தினம் கைம்பெண் ஜெயலட்சுமி 'துவாரகா'' கல்வளை சண்டிலிப்பாய்.

— மனுதார்.

எதிர்
பராயமற்றவர்கள்

1. இராசரத்தினம் மல்லிகா
2. இராசரத்தினம் சேந்தன்.
3. இராசரத்தினம் தயாளன், அனைவரும் ''துவாரகா'' கல்வளை, சண்டிலிப்பாய்
4. கந்தையா நடராத்தினம் (பராயமற்ற 1 3ம் எதிர்மனுதார்கள் தங்கள் வழக்குப்பாதுகாவலர் 4ம் எதிர்மனுதார் மூலம் வட்டுக்கோட்டை.

எதிர்மனுதார்கள்.

மேலே இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட மரணமெய்திவரின் மரணச்சொத்துக்களை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை படியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1986ம் ஆண்டு ஆவணி மாதம் 27-ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்பட்டலாகாது என்பதற்கு காரணம்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றனர்

1986 ஆண்டு ஆடி மாதம் 31 ம திகதி இன்று தேதியிடப் பட்டது

நீதிமன்றக் கட்டளைப்படி,
வி இராமச்சந்திர ஐயா,
பதிவாளர்.

செல்வி
ச. அபிமன்னசிங்கம்,
மனுதாரின் சட்டத்தரணி.

(C 4056)

## காணி ஆணையாளர் திணைக்களம், கிளிநொச்சி மாவட்டம்.

# கேள்விகள் கோரல்

## மழைநீர் பயிர்ச்செய்கைத்திட்டம்

1. கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்த வேலைகளுக்கான முத்திரையிடப்பட்ட கேள்விகள் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்தும், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

2. கேள்விகள் கிளிநொச்சி கச்சேரியின் காணிப்பிரிவிலிருந்தும், பளை உதவி அதிபர் அலுவலகத்திலிருந்தும் 14 08-86 தொடக்கம் 28-08-86 வரையும் வழங்கப்படும். கேள்விப்பத்திரங்கள் பெறப்படும்பொழுது மீளளிக்கப்படாத தொகையாகிய ரூபா 50/-ஐயும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படும் வைப்புப்பணத்தையும் ஒவ்வொரு வேலைகளுக்கும் தனித்தனியாகப் பணத்தைச் செலுத்தி அதன் பற்றுச்சீட்டுகளைச் சமர்ப்பித்தல்வேண்டும்.

3. பூர்த்திசெய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை தலைவர், கேள்விச்சபை, அரசாங்க அதிபர் செயலகம், கிளிநொச்சி என்று முகவரியிடப்பட்டு 28-08-86-ந் திகதி மு. ப. 10-00 மணிக்கு முன்பதாகக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். அல்லது அதற்காக பளை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் போடுதல்வேண்டும். கேள்விகளை தபாலில் அனுப்புவதாயின் கடித மேலுறையின் இடதுபக்க மேல்மூலையில் குறிப்பிட்ட கட்டடத்திற்கான, வீதிக்கான கேள்விகள் என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். சீல் வைக்கப்பட்ட கேள்விகள் அதேதினத்தில் 28 08-86 மு ப 10-30 மணிக்குத் திறக்கப்படும். கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் இத்தினத்தில் கேள்விகள் திறக்கப்படும்பொழுது பிரசன்னமாக இருக்க அனுமதிக்கப்படுவார்கள்;

4. ஏற்கனவே இக்கேள்விகளுக்கான பண வைப்புச்செய்து கேள்விகளைச் சமர்ப்பித்தவர்கள் மீள பண வைப்புச் செய்யவேண்டிய அவசியமில்லையெனினும் கேள்விப்பத்திரங்களைப் புதுப்பித்தல்வேண்டும்.

## வேலைத்திட்டத்தின் விபரங்கள்

**ஜெயபுரம் - பல்லவராயன்கட்டு**

| கட்டிடங்கள் | தொகை | பதிவுத்தொகை | வைப்புச்செய்ய வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1. பாடசாலை அமைத்தல் | 01 | 250,000/- | 300/- |
| 2. அரசினர் விடுதி அமைத்தல் தாம்-III | 01 | 150,000/- | 200/- |
| 3. அரசினர் விடுதி அமைத்தல் தரம் -II | 02 | 200.000/- | 200/- |
| **வீதிகள்—ஆனைவிழுந்தான் குளம்** | | | |
| 1. ஆனைவிழுந்தான் வீதிக்குப் பாலங்கள் அமைத்தல்— கிறவல் போடுதல் | | 100,000/- | 150/- |

மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

சு. முருகவேள்,
பிரதி காணி ஆணையாளரும்,
மேலதிக அரசாங்க அதிபரும் (காணி),
கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்காக.

காணிக்கிளை,
கச்சேரி, கிளிநொச்சி. 11-08 1986.

(A 1129)

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

வியாழக்கிழமை 14-8-86

## இராணுவ பாதுகாப்பிற்காக

# இடிக்கப்பட்ட குருநகர் வீடுகளை திரும்பவும் கட்டிக்கொடுக்க முடிவு

யாழ்ப்பாணம், வியாழன்.
இராணுவத்தினரின் பாதுகாப்புக்கருதி இடிக்கப்பட்ட குருநகர் வீடமைப்புத் திட்ட வீடுகளைத் திரும்பவும் அரசாங்கம் கட்டிக்கொடுக்கவுள்ளது.

குருநகர் மாடிவீட்டில் இராணுவ முகாமிருந்தபோது இம் முகாமின் பாதுகாப்புக் கருதி சுமார் 100 வீடுகள் இடிக்கப்பட்டது தெரிந்ததே.

இவ்வீடுகளை மீண்டும் அதே இடங்களில் முன்பு குடியிருந்த அதே உரிமையாளர்களுக்குக் கட்டிக்கொடுக்க அரசாங்கம் முன்வந்துள்ளது

இவ்வீடுகள் இடிக்கப்பட்டதினால் இவ்வீடுகளில் குடியிருந்த குடும்பங்கள் நாவற்குழியிலுள்ள வீடமைப்புத் திட்ட வீடுகளுக்குச் சென்று குடியிருந்து வருகின்றனவென்பது தெரிந்ததே தற்சமயம் நாவற்குழி வீடமைப்புத் திட்ட வீடுகளை விற்பனைசெய்ய அரசாங்கம் முன்வந்துள்ளபடியால் அவ்வீடுகளில் குடியிருக்கும் குடும்பங்களை வீடுகளிலிருந்து வெளியேற்றவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாம். எனவே, குருநகர் வீடமைப்புத் திட்டத்திலிருந்துவந்து நாவற்குழியில் குடியிருக்கும் மக்களுக்கு அவர்கள் முன்பு வசித்த வீடுகளை மாற்று நடவடிக்கையாகக் கட்டிக்கொடுக்க அரசாங்கம் முன்வந்துள்ளது

இதுசம்பந்தமாக நேற்று யாழ் செயலகத்தில் அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இவ்வாலோசனைக் கூட்டத்தில் வீடமைப்புத் திட்ட அதிகாரிகள், யாழ். மாநகரசபை அதிகாரிகள் உட்பட மற்றும் பலர் கலந்துகொண்டனர். [ச]

## 50 இளைஞர் கைது

வவனியா, புதன்
கிளிநொச்சியில் கரடிப்போக்குச்சந்தியிலும் இலங்கை போக்குவரத்துச்சபைக் அருகாமையிலும் ரோந்து சென்ற பாதுகாப்பு படையினரால் சுமார் 50 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. [ஓ]

## மரண அறிவித்தல்

### செல்வத்துரை - மயில்வாகனம்

செல்வத்துரை மயில்வாகனம் Engineer Kotmale Project) 6-8-86 ல் கண்டியில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற மல்லாகம் திரு செல்லத்துரை J P. திருமதி சின்னத்தங்கம் தம்பதிகளின் புதல்வரும், பூமணியின் அன்புக்கணவரும், செல்வத்துரையின் அன்புத் தந்தையும், பத்மாவதி, Dr s. பத்மநாதன், காலஞ்சென்ற தருமநாதன், கமலாவதி, லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் புன்னாலைக்கட்டுவனில் 10-8-86 ல் நடைபெற்றது.
[C 4058] தகவல்; Dr. s. பத்மநாதன்.

### நடராசா இராஜலெட்சுமி

மலர்வு; 16-8-1922 உதிர்வு: 13-8-1986

இவர் நடராசாபத்தரின் அன்பு மனைவியும் ஆனந்தராசா, கதிரவேலு. மகாலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், வரதராஜா, கோவிந்தராஜா, இரத்தினராஜா (Holland) ஆகியோரின் அன்புத் தாயும் மனோன்மணி, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் இராஜேஸ்வரியின் அன்பு மாமியும் பவானி, நற்குணராசன், நாகபாலா, சிவபாலா, சுதா ஆகியோரின் மாமியும் ஜனார்த்தனன் சஜமுகன் ஆகியோரின்பேத்தியுமாவார், அன்னாரின் பூதவுடல் இன்று (14-8-86) பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அன்னாரின் இல்லத்திலிருந்து கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர் எல்லோரும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.
(C 4064) தகவல்: வரதராசா.

### ஐயாத்துரை இராமநாதன்

கோண்டாவில் நெட்டிலப்பாயைச் சேர்ந்த ஐயாத்துரை இராமநாதன் (முன்னை நாள் தினகரன் பத்திரிகை விளம்பர முகாமையாளரும், (Rameswary Ad-ut. Service உரிமையாளரும், 10 Fountain House Lane, Maradana) காலமானார். இவர் இளைப்பாறிய ஆசிரியை ஈஸ்வரியின் அன்புக் கணவரும், இராஜராஜேஸ்வரி, இராமேஸ்வரி, மித்திரேஸ்வரி, கிருபானந்தகுமாரியின் அன்புத் தந்தையும் Warner Lambert Lanka Ltd ஐ சேர்ந்த கு இராஜகுலசிங்கத்தின் மாமனாரும், பரணீதரன், கிருஷாந்தி, ஹரிஹரன், நிரஞ்சனியின் பேரனுமாவார். இறுதிக்கிரியைகள் கோண்டாவில் மேற்கிலுள்ள அன்னாரது இல்லத்தில் 14 08 1986 வியாழக்கிழமை (இன்று) காலை நடைபெற்று, பூதவுடல் தகனத்திற்காக காலை 10 மணிக்கு காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.
[C 4050]

### திருமதி கணபதிப்பிள்ளை பாக்கியம்

வேலணை மேற்கைச்சேர்ந்த காலஞ்சென்ற திரு. S M கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவி பாக்கியம் 13-8-86ல் காலமாகிவிட்டார் அன்னார் காலஞ்சென்ற இராசதுரை (பிள்ளையார் ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), சிவலிங்கம் (சிவலிங்கம் மோட்டேர்ஸ், யாழ்ப்பாணம்), குணரத்தினம் (பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், யாழ்ப்பாணம்), அபிமன்யு (சிவா ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்), சகாதேவன், தையல்நாயகி, காலஞ்சென்ற சற்குணதேவி, கமலநாயகி ஆகியோரின் அன்புத் தாயாரும். சிவயோகம், இராஜலெட்சுமி. வரதலெட்சுமி, நகுலேஸ்வரி, பரமேஸ்வரி, இரத்தினசிங்கம் (பாலகிருஷ்ணா ஸ்ரோர்ஸ் யாழ்ப்பாணம்), தில்லைநாதன், பாலச்சந்திரன் (கட்டிட பரிசோதகர், கல்வித்திணைக்களம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியும், கண்மணி, காலஞ்சென்ற நடராசா, இராசம்மா, காலஞ்சென்ற இராசையா கௌரி ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 257. கே கே. எஸ் வீதி, யாழ்ப்பாணத்தில் 14-8-86 காலை 10-00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.
(C 1132) தகவல்: திரு. க. குணரத்தினம்

## இருவர் அடையாளம் காணப்பட்டனர்

வவனியா, புதன்.
சூடுவந்த பிலவுப் பகுதியில் அண்மையில் நடந்த சம்பவம் தொடர்பாக இராணுவத்தால் கைதுசெய்யப்பட்ட உலுக்குளம் ஊர்காவல் படையினர் மீது அடையாள அணிவகுப்பு நேற்று நடத்தப்பட்டது அப்போது ஊர்வாசிகள் இரு ஊர்காவல் படையினரை அடையாளம் காட்டியுள்ளனர். (ஓ)

## நஷ்டஈட்டுக் கோரிக்கை

கிளிநொச்சி, புதன்
கடந்த மாதம் ஆயுதப் படையால் சேதமாக்கப்பட்ட கிளிநொச்சி ஜெயந்தி நகர் குருகுலக் கட்டிடத்திற்கு நஷ்டஈடு பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி பிரஜைகள் குழுவிடம் இந்த வேண்டுகோளை குருகுலம் சைவஸ்தாபன நிர்வாகி வே. கதிரவேலு சுவாமிகள் விடுத்துள்ளார். [இ]

## உணவு முத்திரை விநியோகம்

கிளிநொச்சி. புதன்
கிளிநொச்சி மாவட்டத்தில் உணவு முத்திரை விநியோக வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

இம் மாவட்டத்திலுள்ள மூன்று உதவிஅரசாங்க அதிபர் பிரிவிலும் இவ் உணவு முத்திரை விநியோகம் தற்போது நடைபெற்று வருகிறது. [இ]

## டெக், கசற் பறிமுதல்

வல்வெட்டித்துறை, புதன்.
வல்வெட்டித் துறையிலுள்ள ஒரு மினிசினிமாவில் ஆபாசப் படம் காண்பிக்கப்பட்டது தொடர்பாக அங்குசென்ற 'விடுதலைப் புலிகள்' படம் காண்பிக்கப்பட்ட வீடியோ டெக் கசற் முதலானவற்றை எடுத்துச் சென்றனர். அத்துடன் இதற்கு உடந்தையாக இருந்தவர்களையும் எச்சரிக்கை செய்தனர். (எ)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka Under number B/1003/81 Eelanadu P O. Box 49. Telegram, Eelanadu. Telephone 22389 24126.

## 'பொது ஸ்தாபனங்கள் சிறுவர் பராமரிப்பில் ஈடுபடவேண்டும்'' - புலிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா
''எதையும் தெளிவாகப் புரிந்து கொள்ளமுடியாத வயதிலுள்ள கள்ளங்கபடமற்ற குழந்தை உள்ளங்களில் தின சரியான துப்பாக்கி வேட்டுக்களும், குண்டுச் சத்தங்களும் இம்மண்ணின் இரத்தங்களும், துன்ப துயரங்களும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதனால் சின்னஞ் சிறுசுகளின் மனநிலை பெரிதும் பாதிப்படைகிறது. சிறுவயதில் மனதில் ஏற்படும் கடுமையான பாதிப்பு மனித நாகரிகமற்ற சந்ததியின் உருவாக்கத்திற்கு வழி வகுக்கும்'' என்று தமிழீழ விடுதலைப் புலிகள் ''எம் உயிரினும் இனிய தமிழீழ மழலைக்காக'' என்ற தலைப்பில் வெளியிட்ட துண்டுப்பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது

அப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
இன்றைய போராட்ட சூழலில் அரசின் அடங்காத்தனத்திலேயே எம் மக்களின் வாழ்வு தொடர்கிறது. இப் போராட்ட சூழ்நிலையில் எம் செல்வச்சிறுசுகள் எதுவித உயிரோட்டமுமின்றி பயப்பிராந்தியுடனும் பீதியுடனுமே தம் வாழ்நாளைக் கடத்துகின்றனர். உலகளாவிய ரீதியில் எதிர்காலத்தை நன்கு திட்டமிட்ட நாடுகள் குழந்தை பராமரிப்பில் மிகுந்த கவனமெடுக்கின்றன. உதாரணமாக சோவியத் ரஷ்யாவில் மிக அதிகமாக நிதி ஒதுக்கப்படும் ஒரே துறை 'சிறுவர் பராமரிப்பு' ஆகும்.

இதே சூழ்நிலையில் ஒவ்வோர் நாட்டு போராட்ட காலகட்டத்திலும் உளவியல் ரீதியாக சிறுவர் மனநிலை மிகக் கடுமையாக பாதிப்படைகிறது ஓர் நாட்டின் வருங்கால வாரிசுகளுக்கேற்படும் பாதிப்பு அந்நாட்டின் எதிர்காலத்தையே இருளடையச்செய்கிறது.

எனவே இன்றைய சூழ்நிலையில் நாம் குழந்தைகளின் பராமரிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளோம். எம் நாட்டின் வருங்கால வாரிசுகளின் ஒழுங்கமைவான வளர்ச்சியிலேயே எம் எதிர்காலம் தங்கியுள்ளது.

இந்தவகையில் இப்போரின் கடுமையான தாக்கங்களிலிருந்து எம்மழலைகளின் மன நிலை பாதிப்படையாமல் பேணுவதன் ஓர் அங்கமாக இச் சரணாலயம் செயற்படுகிறது

இதேபோன்று அனைத்து பொது ஸ்தாபனங்களும் 'சிறுவர் பராமரிப்பில்' முழுமூச்சாக ஈடுபடுமாறு கேட்டுக் கொள்கிறோம். [ஓ]

## புனரமைப்பு

வட்வெட்டித்துறை. புதன்.
நெல்லியடி சன சமூக நிலையம் அப் பகுதி இளைஞர்களால் புனரமைக்கப்பட்டு வருகிறது. 1948 ம் ஆண்டு இச் சனசமூக நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. (க)

## கிளிநொச்சியிலிருந்து வெளியேறிய 54 குடும்பங்கள் கோணாவிலில் தஞ்சம்

நெடுந்தீவு, புதன்
அண்மையில் கிளிநொச்சியில் நடந்த சம்பவங்களினால் திருநகர், ஜெயந்தி நகர் பகுதிகளிலிருந்து வெளியேறி கோணாவில் ப. நோ. கூ. சங்கக் களஞ்சியக் கட்டடத்தில் 54 குடும்பங்கள் தஞ்சமடைந்துள்ளன.

இக்குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள், சிறுவர். முதியோர் உட்பட சுமார் 250பேர் உணவுப்பொருட்கள் தட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு சர்வோதயம், தென்இந்திய திருச்சபை நிறுவனங்கள் உதவிகள் செய்திருந்தபோதிலும், இவ்வகதிகள் தமது நாளாந்த உணவுத் தேவையைப் பூர்த்திசெய்ய முடியாதவர்களாக உள்ளனர்.

இந்த அகதிகளில் சுமார் 30 பேர் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளாகும். (இ)

## வவனியாவில்—— முகாம் சென்றவர்கள் கடத்தப்பட்டு விடுதலை

வவனியா, புதன்
வவனியா ஆயுதப்படை முகாமுக்குச் சென்ற சன்னாசி பரந்தன் கிராமோதய சபையின் உறுப்பினர்கள் இடைவழியில் இளைஞர்களினால் கடத்தப்பட்டனர்

இச் சம்பவம் பற்றித் தெரிவிக்கப்படுவதாவது:-
நெடுங்கேணி உதவி அரசபிரிவிலுள்ள சன்னாசி பரந்தன் கிராமோதய சபையின் 24 உறுப்பினர்களையும் வவனியா ஆயுதப்படை முகாமுக்கு வரும்படி சன்னாசி பரநதன் கிராமசேவையாளர் திரு. ரி. தணிகாசலத்தினூடாக அழைக்கப்பட்டனராம். அதற்கிணங்க இந்த 24உறுப்பினர்களும் அங்கு செல்கையில் இடைவழியில் இளைஞர்களினால் தடுக்கப்பட்டு கடத்தப்பட்டனர். பின்னர் இந்த 24 உறுப்பினர்களும் விடுவிக்கப்பட்டனர். [ஊ]